DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1420 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 23, 2023

# வெற்றிகரமான 17வது ஆண்டில் ஏழு வெற்றியாளர்களை கௌரவித்து உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா

## ஒன்றாரியோ மாகாண அமைச்சர் Hon. Raymond Chow அவர்களுக்கு சமூக நல்லுறவு விருது

கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தால் 2006ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பெற்று. தனது வெற்றிகரமான 17வது ஆண்டில் ஏழு வெற்றியாளர்களை கௌரவித்து வரலாற்றில் இடம் பிடித்த சிறப்பான விழா என்ற பெயரை தட்டிக் கொண்டது உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா.







கடந்த 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள மெற்றோபொலிட்டன் கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விருதுகள் வழங்கும் விழாவை சிறப்புற நடத்த தங்கள் ஆதரவை வழங்கிய அனைத்து வர்த்தகத்துறை அன்பர்களுக்கு எமது நன்றி.

இங்கே காணப்படும் படங்களில் உதயன் சமூக நல்லுறவு விருது வழங்கப்பெற்ற ஒன்றாரியோ மாகாண அமைச்சர் கௌரவ **Raymond Chow,** 'இளையோருக்கான அடையாளம்' என்னும் ஒன்றாரியோ மாகாணத்திற்குரிய விருதினைப் பெற்ற ஆதவன் கனநாதன் மற்றும் கியுபெக் மாகாணத்திற்குரிய விருதினைப் பெற்ற கௌரீஸ் சுப்பிரமணியம் ஆகியோர் மேடையில் தங்களுக்குரிய விருதுகளைப் பெற்றுக்கொள்வதையும் அவர்களோ வர்த்தகப் பெருமக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் மற்றும் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினர் லோகன் கணபதி. ஆகியோர் மகிழ்ச்சியுடன் நிற்பதையும் காணலாம்.

(உள்ளே விபரமான செய்தி 16ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

Toronto will elect a new Mayor on June 26th.

# Vote for Ana Bailão

**Ready to fix services, build housing, make life more affordable, and keep taxes low.**

Ana Bailão
Mayor

Ana is #11 on the ballot

Find out where to vote here

anabailao.ca



Tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...



பனை வெல்லம்



தேன் நெல்லி

மரச்செக்கு எண்ணெய்கள்



சுக்கு மல்லி காபி தூள்

யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC

Canada We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

# ஜெனிவாவில் இலங்கை மீண்டும் அரங்கேற்றியுள்ள 'பொய்களின் பிரசங்கம்'

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில், நேற்று வியாழக்கிழமை கூடிய நான்காம் நாள் அமர்வு முன்னரைப் போன்றே ஈழத் தமிழர்களின் மனப் புண்களுக்கு மருந்து தடவக் கூடிய நிலையில்லாமல் அமர்வுகள் பெயருக்காக நடத்தப்படுவது போன்று நகர்ந்து செல்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் எமக்கு தெரிவிக்கின்றன.

இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு மனித உரிமைகள் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நீ்.ப் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது வாய்மொழிமூல அறிக்கையை வாசித்தார்.

அவ்வறிக்கையில் ஐக்கிய நாடுகள் சபையினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலும், மனித உரிமைகளை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி இலங்கையால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்துத் தெளிவுபடுத்தும் வகையிலும் பதில் உரையாற்றியபோதே ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டினார். இலங்கை தீவிர சமூக, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு எட்டப்பட்டமை உள்ளடங்கலாக பொருளாதார மீட்சியை முன்னிறுத்திய நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாகப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறாக பொய்களின் பிரசங்கம் செய்துள்ள இலங்கைப் பிரதிநிதிகள் தங்களின் அரசாங்கத்தின் உண்மையான தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை மறைக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தை ஒரு மனித நேயமிக்க அரசாங்கமாக காட்ட இலங்கைப் பிரதிநிதிகள்முனைந்துள்ளார்கள் .

இதன் போது அண்மையில் கொழும்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரோடு இலங்கை அரசு நடத்திய 'போலியான பேச்சுவார்த்தைகளில்' தமது அரசு காத்திரமான முடிவுகளை எடுத்துள்ளதாகக் கூறியுள்ளனர் இலங்கைப் பிரதிநிதிகள். பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட சம்பந்தன் அவர்கள் ஜனாதிபதி ரணிலிடம் மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டமை பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இது ஒரு புறமிருக்க இலங்கை அரசின் பிரதிநிதிகள் தெரிவிக்கும் பொய்யான கருத்துக்களை மறுதலிக்கும் வகையில் ஐக்கியநாடுகள் சபையில் எந்தவொரு நம்பிக்கையானவர்களும் காணப்படவில்லை என்பது உண்மையே.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# ஜேர்மனி வாழ் கவிதாயினி ஜெயந்தினி ஶ்ரீகரக்குருக்கள் அவர்களின் கவிதை நூல்கள் அறிமுகவிழா



நீண்ட காலமாக கவிதை உலகில் சஞ்சரித்து வருபவரும் தனது கவிதைகளால் ஐரோப்பிய நாடுகளில் நன்கு அறிமுகமானவருமான ஜேர்மனி வாழ் கவிதாயினி ஶ்ரீமதி ஜெயந்தினி ஶ்ரீகரக்குருக்கள் அவர்களின் இரண்டு கவிதை நூல்கள் அறிமுகவிழா கனடா ஸ்காபுறோ நகரில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

733 **Birchmount Rd, Scarborough, ON M1K 1R5** என்னும் விலாசத்தில் அமைந்துள்ளகனடா கந்தசாமி ஆலய மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை

23ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ள கவிதை நூல்களான 'சிறகு விரித்த பட்டாம் பூச்சி' மற்றும் 'என் மனவா-னில் சிந்திய முத்துக்கள்' ஆகியவற்றின் அறிமுகவிழாவிற்கு கனடா கந்தசுவாமி ஆலய பரிபாலன சபைத் தலைவர்: திரு சு.முத்துராமலிங்கம் (முத்து) தலைமை தாங்கவுள்ளார்.

கவிதை இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அனைவரும் அ்னபுடன் அழைக்கப்படுகின்றனர்.

# அவுஸ்த்திரேலியா வாழ் பிரபல எழுத்தாளர் ஆ. சி. கந்தராஜா அவர்களின் "அகதியின் பேர்ளின் வாசல்" என்னும் நாவல் வெளியீட்டு விழா கனடா ஸ்காபுறோ நகரில் எதிர்வரும் 29-07-2023 அன்று நடைபெறவுள்ளது.




**TELEMARKETERS WANTED**

தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாக உரையாடக் கூடிய
**TELEMARKETERS**
உடனடியாகத் தேவை.
தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

416 754 9492

**Help Wanted**

**Workers needed for renovation company. Must have experience in one of the following:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva**

**416-706-8160**

**Room for Rent**

**Near 9th Line and Hwy 7 in Markham.**
**One bedroom with attached washroom available for rent.**
**Other room is rented by a male who works from home.**
**Electricity, Wifi, Water, and Parking included.**
**Rent: $1000.00**

**515-710-1451**

**மணமகன் தேவை**

விரிவுரையாளராக **Saskatchewan** இல் பணியாற்றும் 33 வயதுடைய **5'8"** உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு
1 (306) 914 4830

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் சமுர்த்தி பயனாளிகள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம்

- மன்னார் நிருபர் (21-06-2023)



நலன்புரி நன்மைகள் சபையினால் செவ்வாய்க்கிழமை (19) வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட, மற்றும் உள்வாங்கப்படாத பயனாளிகள் புதன்கிழமை (20) மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பணம் வசதி உடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்களும் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவைகள், சிறு நீரக நோயாளிகள் உட்பட பலரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை எனவும் குறித்த பட்டியல் பொருத்தமற்றது என தெரிவித்தும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

நாட்டில் ஏற்கனவே பொருளாதார நெருக்கடி விலைவாசி அதிகரிப்பினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சஜித் பிரேமதாசவின் வீட்டுத்திட்டத்தினால் கடனாளிகளாக உள்ளதாகவும் இன்னும் பல பெண்கள் நுண் நிதி நிறுவனக்களில் கடன் பெற்றே வாழும் இவ்வாறான நிலையில் சமுர்த்தி கொடுப்பனவு பட்டியலிலும் தங்கள் பெயர் நீக்கப்பட்டமை தங்களை ஏழ்மையில் தள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் வேலை எனவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்து பிரதேச செயலகத்திற்கும் முன்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் மன்னார் நகர் பிரதேச செயலாளர் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் புதிய நடைமுறை தொடர்பிலும் தெளிவுபடுத்திதிருந்தார்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர்.






போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் கோரிக்கை தொடர்பில் தாங்கள் பரீசிலிப்பதாகவும் பட்டியலில் விடுபட்டு சமூர்த்தி பொறுவதற்கான தகுதியுடைய நபர்கள் மேன் முறையீட்டை மேற் கொள்ளுமாறும் தகுதி அற்ற ஆனாலும் சமூர்த்தி பட்டியலில் பெயர் குறிப்பிட்டுள்ள நபர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் தொடர்பிலும் முறைப்பாடு வழங்கும் படி மன்னார் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண்கள் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவும் தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.

# வடக்கில் மூடப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான பாடசாலைகள்



(22-06-2023)

வடக்கில் சுமார் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் (21.06.2023) பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, வெற்றிடம் என்ற விடயம் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்திற்கு மட்டும் உள்ள பிரச்சினை இல்லை. வடக்கு, கிழக்கில் பல இடங்களிலும் காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாகும்.

வடக்கை பொறுத்த வரை சுமார் 194 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமையினால் மூடப்பட்டிருக்கின்றது.

இதற்கு காரணம் கிராமப்புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி மாணவர்கள் நகரத் தொடங்கியிருக்கின்றமையும், பிறப்பு வீதம் குறைந்து செல்வதுமே ஆகும். இதே நிலை மட்டக்களப்பில் 07 வருடங்கள் அரச அதிபராக கடமையாற்றும் போதும் ஏற்பட்டது.

இதற்கு காரணமாக பிறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றமை மற்றும் 01ம் வகுப்பிலே மாணவர்களை அனுமதிப்பதில் சில பாடசாலைகளில் பூச்சிய மட்டத்தில் காணப்படுகின்றதாகவும் பிரதேச செயலாளர்களால் அப்போது தெரிவித்தனர்.

எனவே இந்த விடயங்கள் புலம்பெயர்ந்த சமூகத்தினாலும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்தினாலும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.

நாங்கள் வாழ வைக்க வேண்டும் என எண்ணுகின்ற எங்களது சமூகம், இந்த பிரதேசம் எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும் என்பதுடன் இச்சமூகத்தை வாழவைக்கும் வழிவகைகளை செய்கின்றவர்களாக நீங்கள் இருக்க வேண்டும்.

இதேவேளை, சில விடயங்களின் புள்ளிவிபரங்கள் இச்சமூகத்திலே அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இந்த சமூகத்திலே விவாகரத்து அதிகரித்தல், குழந்தை பேறு குறைவடைந்தமை, வயது சென்ற திருமணங்கள் அதிகரித்து காணப்படுதல் மற்றும் குடிபோதை, போதைவஸ்து, தற்கொலை போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகள் அதிகரித்து காணப்படுகின்றன.

எனவே இவற்றை எல்லாம் கடந்து இந்த சமூகம் வாழ வேண்டும் என்றால் புலம்பெயர்ந்த சமூகம் ஆற்ற வேண்டிய பணி நிறைய இருக்கின்றது.

அதேபோன்று சிறிய பணிகளோடு மட்டும் நின்று விடாது இந்த சமூகத்திலே புரையோடிப்போயிருக்கின்ற பல்வேறு உளநல பிரச்சினைகளிற்கும் தீர்வு தேட வேண்டிய காலம் தற்போது நிலவுகிறது.

வெறுமனே உரிமை பிரச்சனையோ, அரசியல் பிரச்சனையோ அல்லாமல் எங்களது பிரச்சினைகள் எது என உணர்ந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

இளைய சமூகத்திடமும், மாணவர்களிடையேயும், சிறுவர்களிடையேயும், குடும்பங்களிடையேயும் புரையோடிப்போயிருக்கின்ற சமூக உளநல பிரச்சினைகளிற்கு தீர்வு காண வேண்டிய தேவையும் அவசரமும் இன்று எங்களிடம் காணப்படுகின்றது.

அதை இங்கே கூடியிருக்கின்ற புலம்பெயர் சமூகங்களும், உள்ளூர் சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சி திட்டத்திற்கு அமைவாக மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பயறு மற்றும் உளுந்து விதைகள் வழங்கி வைப்பு

- மன்னார் நிருபர் (19-06-2023)



மறு வயல் பயிர் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பயறு மற்றும் உளுந்து விதைகள் திங்கட்கிழமை (19) இலவசமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சி திட்டத்திற்கு அமைவாக நாட்டின் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு கமத் தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் பயறு மற்றும் உளுந்து விதைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச பகுதிகளைச் சேர்ந்த 140 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு 130. விவசாயிகளுக்கு பயறு விதைகளும் 10. விவசாயிகளுக்கு உளுந்து விதைகளும் இன்று மன்னார் உயிலங்குளம் கம நல சேவைகள் நிலையத்தில் காலை 9.30 மணி அளவில் வைபவ ரீதியாக இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.



குறித்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் கலந்து கொண்டு குறித்த விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி வைத்தனர்.

இவ்வாறு மாந்தை மேற்கு, மடு, நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# எமது மக்கள் இந்த மண்ணில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் – யாருக்கும் சேவகம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை

## மன்னாரில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்



- மன்னார் நிருபர் (19-06-2023)

உலகத்திலே ஈழத்தமிழர்களின் இழப்பு என்பது சொல்லில் அடங்காது. இந்த மண்ணில் பாரிய ஒரு இனப்படுகொலை நடந்து முடிந்துள்ளது. லட்சக்கணக்கான மக்களின் உயிர்கள் பரிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையில் எமது மக்களின் உரிமைகள் வெற்றி பெற வேண்டும். இந்த மண்ணில் யாரும் கேள்வி கேட்க முடியாத நிலையில், நாங்கள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

33 வது தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (18) மாலை மன்னாரில் உள்ள ஈ.பி.ஆப்.எல்.எப் கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக கட்சி ஆகிய 5 கட்சிகளும் ஒன்று கூடி நாங்கள் அனைவரும் திடமான ஒரு பாதையில் செல்வதற்கு ஒரு யாப்பை தயார் செய்து அனைவரும் அதனை ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

முன்னர் தமிழரசு கட்சி இருந்த போது நாங்கள் ஒரு யாப்பை தயாரிக்க முடியாது என்று சொன்னார்கள். இன்று குறித்த 5 கட்சிகளுக்கும் ஒரு நிர்வாகத்தையும் தெரிவு செய்துள்ளோம்.

கட்சிக்கான செயலாளர், பேச்சாளர், குறித்த கட்சிக்கான தேசிய அமைப்பாளரை நியமித்துள்ளோம். இவ்வாறு பல்வேறு தெரிவுகளை மேற்கொண்டு ஒரு நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தி உள்ளோம். எமது முக்கிய நோக்கம் நாங்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்பது.

மேலும் ஒரு கோரிக்கையையும் நாங்கள் முன் வைத்துள்ளோம். எதிர் காலத்தில் நாங்கள் அரசாங்கத்துடன் பேசுவதாக இருந்தால் நாங்கள் முன் நின்று முயற்சி செய்து தமிழரசுக்கட்சி, சி.வி. விக்னேஸ்வரன் போன்றவர்களையும் அழைத்து நாங்கள் அனைவரும் இணைந்து ஒரே குரலில் பேச வேண்டும் என நாங்கள் அந்த முயற்சிகளை முன்னெடுப்பதாகவும் முடிவுகளை எடுத்துள்ளோம்.

நாங்கள் ஏனையவர்களுக்கு முன் மாதிரியாக செயல்பட வேண்டும். எவ்வளவு இழப்புக்களை சந்தித்துள்ளோம்.

சுமார் 45 வருட கால போராட்டம், யுத்தம், உலகத்திலே ஈழத்தமிழர்களின் இழப்பு என்பது சொல்லில் அடங்காது. இந்த மண்ணில் பாரிய ஒரு இனப்படுகொலை நடந்து முடிந்துள்ளது. லட்சக்கணக்கான மக்களின் உயிர்கள் பரிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையில் எமது மக்களின் உரிமைகள் வெற்றி பெற வேண்டும்.

இந்த மண்ணில் யாரும் கேள்வி கேட்க முடியாத நிலையில், நாங்கள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். எங்களுக்காக இருக்கக்கூடிய இப்போது அரசியல் சாசனத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம். 13 ஆவது திருத்தச் சட்டம் என்றால் என்ன? மாகாணங்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

முழுமையாக இல்லை. ஆனால் இருக்கக்கூடிய அதிகாரங்களை எங்களுக்கு தாருங்கள். எங்களுக்கு அதிகாரம் வழங்கினால் எங்களுக்கான ஒரு பொலிசை உருவாக்குவோம். மாகாணத்தை கேட்காது காணிகளை யாருக்கும் வழங்க முடியாது என்ற நிலை உள்ளது.

எனவே குறைந்த பட்சம் அந்த அதிகாரங்களை யாவது எங்களுக்கு தாருங்கள். ஆரம்பத்தில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையை நாங்கள் உருவாக்கினோம். வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் தலைநகராக திருகோணமலையை தெரிவு செய்திருந்தோம்.

ஆனால் 18 வருடங்களுக்கு பிற்பாடு மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி போன்றவர்கள் நீதிமன்றம் சென்று வடக்கு கிழக்கு இணைப்பை இல்லாது செய்து வடக்கு, கிழக்கை வேறு வேறாக ஆக்கினார்கள்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)





# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# மன்னாரில் சமுர்த்தி பயனாளிகள் 2வது நாளாகவும் போராட்டம் முன்னெடுப்பு — வர்த்தகர்கள், வசதியுடையவர்கள் இணைக்கப் பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

(22-06-2023)

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட, மற்றும் உள் வாங்கபடாத பயனாளிகள் வியாழக்கிழமை (22) காலை முதல் 2வது நாளாகவும் மன்னார் பிரதேச செயலகத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பணம் வசதி உடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்களும் உள்வாங்கப்பட்டு இருப்பதாகவும் ஆனால் தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவைகள், சிறுநீரக நோயாளிகள், சொந்த வீடு இல்லாதவர்கள், உட்பட பலரின் பெயர் உள்ளடக்கப் படவில்லை எனவும் குறித்த பட்டியல் பொருத்தமற்றது என தெரிவித்து குறித்த போராட்டத்தை 2வது நாளாகவும் முன்னெடுத்திருந்தனர்.



நாட்டில் ஏற்கனவே பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சஜித் பிரேமதாசவின் வீட்டுத் திட்டத்தினால் கடனாளிகளாக உள்ளதாகவும் இன்னும் பல பெண்கள் நுண் நிதி நிறுவனக்களில் கடன் பெற்று வாழும் இவ்வாறான நிலையில் சமுர்த்தி கொடுப்பனவு பட்டியலில் தங்கள் பெயர் நீக்கப்பட்டமை தங்களை ஏழ்மையில் தள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் வேலை எனவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்து பிரதேச செயலகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் சந்தித்து புதிய நடைமுறை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். எனினும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் பிரதான பாலத்தடி மற்றும் மன்னார் மாவட்டச் செயலகம் ஆகிய இடங்களுக்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகள் அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட, மற்றும் உள் வாங்கப்படாத பயனாளிகள் அனைவரும் ஒன்றிணைந்து மாவட்ட ரீதியான போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## (5ம் பக்கம் தொடர்ச்சி) எமது மக்கள் இந்த மண்ணில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் — யாருக்கும் சேவகம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை



கிழக்கு மண்ணும் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக வழக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்ற தேவைப்பாடு காணப்பட்டது.

இன்று ஜனாதிபதியாக உள்ளவருக்கு பாராளுமன்றத்தில் பின் பலம் கிடையாது. அவர் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர். அவருக்கு பாராளுமன்றத்தில் பொது ஜன பெரமுன வின் ஆதரவு மட்டுமே அவருக்கு உள்ளது.அவரால் புதிய விடையங்களை கொண்டு வர முடியாது. நாங்கள் அவரிடம் கேட்பது 13 ஆவது திருத்தம் ஏற்கனவே அரசியல் சாசனத்தில் இருக்கிறது.

அது ஒரு சட்டமாக உள்ளது. அதை நீங்கள் நிறைவேற்றுங்கள். அதை நிறைவேற்றுவதில் உங்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது.ஒட்டு மொத்தமான சிங்கள தரப்பு அதை நிறைவேற்ற பிரச்சினை இல்லை என்று சொல்லுகின்ற போதும் இன்று வரை அதனை நிறைவேற்றவில்லை.

நாங்கள் மாத்திரம் இல்லாது தமிழரசுக் கட்சியுடனும், சி.வி. விக்னேஸ்வரனுடன் கதைத்து அவர்களையும் இணைத்துக் கொள்ள விரும்புகின்றோம். அவ்வாறான ஒரு செயல்பாட்டை செய்யவும் விரும்புகின்றோம்.

நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து கொண்டால் மாத்திரமே இந்த விடையங்களில் வெற்றி கொள்ள முடியும் என்பது காலத்தின் தேவையாக உள்ளது.

எமது மக்கள் இந்த மண்ணில் கௌரவமாக தலை நிமிர்ந்து வாழ வேண்டும். யாருக்கும் கை கட்டி சேவகம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. எமக்கு சுமார் 15 லட்சம் புலம்பெயர் உறவுகள் எமக்கு ஆதரவாக உள்ளனர். என அவர் மேலும் தெரிவித்தார்.






# பிரபாகரன் மரணம்: உண்மையை கூற அரசு மறுப்பது ஏன்?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்குவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இறுதி யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பிரபாகரனின் மரணம் தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

அவர் உயிரிழந்த நிலையில் நந்திக்கடல் பகுதியில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டு அது கௌரவமற்ற முறையில் ஊடகங்களின் முன்னர் காட்சிப்படுத்தவை உலகம் அறிந்தது. இறுதிகட்ட யுத்தத்தில் அவர் என்று, எப்படி உயிரிழந்தார் என்பது தொடர்பில் பல கேள்விகள் உள்ளன. அது குறித்த சர்ச்சைகளும் தொடருகின்றன.

அதுமட்டுமின்றி அவர் உயிரிழந்த பிறகு அவரது சடலத்திற்கு என்ன ஆனது என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. ஆனால், அவர் இறந்த பிறகு அவரது உடல் பிரேத பிரிசோதனை செய்யப்பட்டது.

குறிப்பாக பிரபாகரனின் மரபணு (DNA) பரிசோதனை, பிரேத பரிசோதனை அறிக்கைகளை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் இருப்பதாக குற்றஞ்சுமத்தப்படுகிறது.

இதனைக் காரணங்காட்டி பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்கிற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. எனினும், அதனை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்து வருகிறது.

இவ்வாறான நிலையில், பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் மிதுன் ஜயவர்தன கோரியுள்ளார்.

பிரபாகரனின் பிரேதப் பரிசோதனை அறிக்கை, DNA பரிசோதனை அறிக்கை, உயிரிழந்தது பிரபாகரன் என உறுதி செய்வதற்கு யாரிடமிருந்து னுயேு மாதிரிகள் பெறப்பட்டன? என்பது தொடர்பான தகவல்களை வழங்கக்கோரி இந்த தகவலறியும் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டிருந்தது.

2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகத்துக்கு தான் இந்த விண்ணப்பித்தை அனுப்பி வைத்திருந்ததாக ஊடகவியலாளர் மிதுன் கூறுகிறார்.

"தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்தத் தகவல்களை வழங்கினால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்" என்று குறிப்பிட்டு இலங்கை இராணுவமும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சும் ஊடகவியலாளரின் தகவல் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

எனினும், இலங்கை தகவலறியும் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் ஊடகவியலாளர் மிதுன் தெரிவித்தார்.

பொதுவாக தேசியப் பாதுகாப்பு என்பது மிகவும் பரந்துபட்ட ஒரு சொல்லாகும். அதற்கான வரையறைகளை வகுப்பதும் கடினம். தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தொடர்ச்சியாக இலங்கை அரசு பல அட்டூழியங்களில் ஈடுபட்டு வருகிறது என்பது உண்மை. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாடு.

பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை ஒப்புக்கொள்ளும் அரசு, அவர் மரணம் எவ்வாறு சம்பவித்தது என்று கூற தயங்குவதிலிருந்து சில சந்தேகங்கள் எழுகின்றன. அவர் உடல் மீதான பிரேத பரிசோதனை அறிக்கையை வெளியிட்டால், உயிழப்பிற்கான உண்மையான காரணம் (அறிக்கை நியாயமானதும் உண்மையுமாக இருந்தால்) தெரியவரும். அதை அளிக்க அரசு தயங்குவதிலிருந்து அதில் ஏதோ மர்மம் இருக்கிறதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

அந்த அறிக்கை வெளியிடப்படாத வரையில் சந்தேகம் வலுக்கவே செய்யும். அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின், அந்த பிரேத பரிசோதனை அறிக்கை, உண்மைக்கு புறம்பில்லாத வகையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்ச் சமூகம் எதிர்பார்க்கிறது.


தென்னிலங்கையைச் சேர்ந்த மிதுன் ஜயவர்தன போன்று யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவரும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இதே கேள்வியை கேட்டதாகவும், அதே பதில் அவருக்கும் அளிக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

கனடிய செய்திகள் Canadian News

# Laurier Club ஆதரவாளர்களை வருடா வருடம் கனடியப் பிரதமர் சந்தித்து விருந்துண்டு தனது நன்றியைத் தெரிவித்த கனடியப் பிரதமர்

கனடாவின் ஆளும் லிபரல்கட்சியின் அதிஉயர் அங்கத்துவம் கொண்டவர்களின் Laurier Club ஆதரவாளர்களை வருடா வருடம் கனடியப் பிரதமர் சந்தித்து விருந்துண்டு தனது நன்றியைத் தெரிவிப்பது வழக்கம்.

இந்தவகையில் 2023ம் ஆண்டிற்கான சந்திப்பும் விருந்துபசாரமும் கடந்த 12ம் திகதி ஒட்டாவா மாநகரில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட ஸ்காபுறோ லத்திகா நகை மாளிகையின் அதிபர் சசிகுமார்-பிரியா தம்பதி மற்றும் கனடா உதயன் லோகேந்திரலிங்கம்-பத்மா தம்பதி ஆகியோருக்கு நன்றியும் வாழ்த்துக்களையும் தெரிவித்த பின்னர் கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் அவர்களோடு இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டதை இங்கு காணலாம்.








# எல்லோர்க்கும் இனிவராய் வாழ்ந்து நிரந்தரமாய் எமைப் பிரிந்த சாந்திநாதன்

கனடாவில் நீண்ட காலம் வாழ்ந்து பல்வேறு துறைகளில் ஆர்வத்துடனும் ஈடுபாட்டோடும் உழைத்து. நண்பர்களைச் சம்பாதித்து குடும்பத்தைக் கட்டிக் காத்து அண்மையில் காலமான திரு. நாகமுத்து சாந்திநாதன் அவர்களது இறுதிக்கிரியை நிகழ்வில் அவரது நண்பர் டாக்டர் கதிர் துரைசிங்கம் ஆற்றிய இரங்கலுரை.

--------------------------------------------------------

எல்லோற்கும் நண்பனாகவும், எல்லோற்கும் இனியவராகவும்,
எல்லோற்கும் உதவுபவராகவும்,
எல்லோற்கும் பொதுவாவனராகவும்
எல்லோரின் மதிப்பிற்கு உரியவராகவும்
எம்மத்தியில் வாழ்ந்தவர் திரு நாகமுத்து சாந்திநாதன்
மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து
அவர்களுக்கு மதிப்பளித்துப் பாடறிந்து ஒழுகும் சாந்திநாதனை
அனைவரும் நேசிக்கிறார்கள்
சொந்தம் கொண்டாடுகிறார்கள்
அழைத்த விழாக்களுக்கு குறித்த நேரத்திற்கு தவறாது செல்லும் சாந்தி விழா முடிந்த பின் அதன் அமைப்பாளரையும் கலைஞர்களையும்
பாராட்ட தவறமாட்டார் திருத்தங்கள் இருப்பின் நாசூக்காக அவர்களுக்கு எடுத்துக் கூறவும் தயங்கமாட்டார்.
நேர்மை, நேர்த்தி, நேரம் தவறாமை சாந்தியின் தாரக மந்திரம். பொறியியல்
துறை சார்ந்த சாந்தி Planning இன்றி எதுவும் தொடங்க மாட்டார்.
நாடக இயக்குனராக சிறந்து விளங்கிய
சாந்தி 25 ஆண்டுகளாக மகாஜனக் கல்லூரி முத்தமிழ் விழாக்களின்
சூத்திரதாரியாக செயற்பட்டதொடு பரீட்சைக் குழுவின்
பொறுப்பேற்று திறம்பட நடத்தியவர் சாந்திநாதன்
இரண்டு ஆண்டு தலைவராக பணிபுரிந்து பின்னர் காப்பாளராக சங்கத்தை வழிநடந்தியவர் அரங்காடலின் "ஆக்குவாய் காப்பாய்" நாடகத்தில்
என்னை ஒரு வைத்திய நிபுணராக நடிக்க செய்து அதை ஐந்து மேடை ஏற்றி, பலர் பாராட்டைப் பெற வைத்த இயக்குனர் சாந்தி என்னை அண்ணை என்றே அழைப்பார்.
2012 இல் உஷா சாந்தி உடன் மனைவியும் நானும் விடுமுறைக்கு ஸ்ரீலங்கா சென்றபோது சாந்தியின் திட்டமிடலின் திறனையும் அதன் பலனையும் அனுபவித்தேன் எந்த விழாவாயினும் என்னைக்கூட்டிச் செல்பவர் சாந்திதான்-
ஐந்து மணி என்றால் 4.59 க்கு சாந்தியின்
Car driveway யில் நிற்கும். - விழா நிகழ்வுகளை விட வாகனத்தில் சாந்தியின் விமரசனமும் சம்பாஷனையும் சுவாரசியமாக இருக்கும்.
சாந்தியின் நடை உடை, நாடகம், இரசனை, உரையாடல்
ஹாசியம், விமர்சனம் அனைத்துமே
தனித்துவமானவை.
துரநெ 10 சாந்தியுடன் இருந்த நான் மதியம்
12 15 அளவில் விடை பெறுகிறேன் என்று கை அசைத்தேன்
நானும் விடைபெறும் நேரம் நெருங்கிவிட்டது.
எல்லாம் plan படி நடக்குது என்று உணர்ந்த
சாந்தி Thumbs up காட்டிய
போது நட்பின் வலிமையையும், வலியையும் உணர்ந்தேன்.
போற்றி புகழ்ந்திருந்து
பொய் கெட்டு மெய் ஆன சாந்திநாதனின் ஆன்மா - மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல் - சிவன்அருளால் சிவன் தாள் சேர வணங்குவோம்




# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# புதுப்பொலிவுடன் துர்க்கேஸ்வரம் கனடாவில் நிகழ்ந்த மாபெரும் கும்பாபிஷேகம்

## பக்தர்கள் ஆரவாரம் வானைப்பிளந்த மந்திரகோஷம்



கடந்த 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி அளவில் துர்க்கேஸ்வரம், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேகம், பக்திபூர்வமாகவும் விமரிசையாகவும் இணையற்ற சிறப்புக்களுடன் நிகழ்ந்தேறியுள்ளது. 48 தினங்கள் இரண்டு கால யந்திரபூஜையும் 12 தினங்கள் கிரியைகளும் 12 காலங்கள் யாகமும் இடம் பெற்றதாக கனடாவில் நிகழ்ந்த முதல் கும்பாபிஷேகம் இதுவாகும். பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தரிசிக்க, பல நாடுகளிலும் இருந்து பிரசித்தி பெற்ற தேவஸ்தானங்களில் இருந்து வருகைதந்த 30க்கும் மேற்பட்ட குருமார்கள் இந்தக் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தனர். தமிழகத்தில் இருந்து பிள்ளையார்பட்டி டாக்டர் கி.பிச்சைக்குருக்கள் அவர்கள் இக்கும்பாபிஷேகத்தை நெறிப்படுத்திச் சிறப்புற நிகழ்த்துவித்தார். நடைபெற்ற கும்பாபிஷேகம் பற்றி ஆலய தலைவரும் பிரதமகுருக்களும் ஆகிய மஹாகுரு சிவஸ்ரீ கணஸ்சுவாமிகள் தியாகராஜாக்குருக்களிடம் கேட்டபோது, "அம்பாளின் திருவருளால் எதிர்பார்த்தமைக்கும் மேலாக சிறப்புற நிகழ்ந்தது" என்று கூறினார்.

# "சைவப் பேரரசர்"

## டாக்டர் சிவஸ்ரீ கி.பிச்சைக்குருக்களின் அளப்பரிய பணிகளைப் பாராட்டி

# துர்கேஸ்வரம் வழங்கிய கௌரவ விருது

உலகெங்கும் உள்ள மக்கள் சைவசமயத்தை சரியான முறையில் அனுசரித்து நற்பலன்களை அடையும் வகையில், எண்ணற்ற சேவைகளை ஆற்றும், தன்னலம் கருதாத பெருந்தகை டாக்டர் சிவஸ்ரீ கி.பிச்சைக்குருக்கள் அவர்கள். அல்லும் பகலும். அயராது பணியாற்றி சைவசமயத்துக்காய் தன்னை அர்ப்பணித்த "அண்ணா" அவர்களுக்கு அதிஉயர் விருதாகிய "சைவப் பேரரசர்" என்னும் கௌரவத்தை துர்க்கேஸ்வரம் திருக்கோவில் மஹாகும்பாபிஷேக விழாவில் வழங்கியது.

இவ்விருதை வழங்கிக் கௌரவித்தமை குறித்து, மஹா கும்பாபிஷேக குருமார்களிடம் கேட்டபோது, தகுந்த ஒரு கௌரவத்தை "அண்ணா"வுக்கு வழங்கிய துர்க்கேஸ்வரத்தை நெகிழ்ச்சியுடன் பாராட்டினர். இவ்விருது வழங்கியமைக்கு பலரும் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்து வருகின்றனர்.



## மகோற்சவ காலத்தில் துர்க்கேஸ்வரத்தில்

# சிறப்பு வழிபாடுகள்

## யூன் 27 செவ்வாய் முதல் யூலை 21 வெள்ளி வரை 25 தினங்கள்

துர்க்கேஸ்வரம் திருக்கோவில் மகோற்சவம் ஆடிப்பூரத்தை பூர்த்தியாகக் கொண்டு 25 தினங்கள் நிகழ்வது என்பதை யாவரும் அறிவீர்கள். மகோற்சவம் என்றாலே துர்க்கேஸ்வரம் களைகட்டும். ஏற்பாடுகள் அனைத்தும் மிகச் சிறப்பு வாய்ந்தவையாக இருக்கும். இந்தக் காலத்தை எதிர்பார்த்திருக்கும் பக்தர்கள் ஏராளம். விரதம் அனுஷ்டிப்பவர் பலர். தினமும் அம்பாள் தரிசனத்துக்கு வருபவர் பலர்.

இந்த ஆண்டு யூலை 21ம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம் அமைவதால், இருபத்தைந்து தினங்களுக்கு முன்னரான யூன் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை மகோற்சவகாலம் ஆரம்பிக்கிறது.

அதே நேரம் துர்க்கேஸ்வரத்தில் மஹாகும்பாபிஷேகத்தினைத் தொடந்து நிகழும் மண்டலாபிஷேகம் யூன் மாதம் 19ம் திகதி ஆரம்பித்து ஆகஸ்டு 5ம் திகதி வரை நாற்பத்தெட்டு தினங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, கொடியேற்றம் போன்ற விஷேட திருவிழாக்கள் நீங்கலாக, வழிபாடுகள் விஷேடமாக இடம்பெறும்.

மகோற்சவகாலத்தில் அடியார்கள் பக்தி சிரத்தையுடன் ஆலயம் வந்து, அனைத்து வழிபாடுகளையும் தரிசித்து, மண்டலாபிஷேக அருள்மேன்மைகளையும் பெற்று நீடுழி வாழ்வீர்களாகுக.

**துர்க்கேஸ்வரம்**
**மஹாகும்பாபிஷேகத்துக்கு**
**பின்னர் அமைந்த முதல்**
**திருவிளக்கு பூஜை**
**25-8-2023 வெள்ளிக்கிழமை**

## பகல் வழிபாடு

**காலை 9:30 மணி முதல் பகல் 1:00 மணி வரை**


| | |
|---|---|
| காலை 9:30 மணி | காலை பூஜை |
| காலை 10:00 மணி | கும்பபூஜை ஆரம்பம் |
| காலை 10:30 மணி | திரவ்வியாபிஷேகம் |
| பகல் 11:00 மணி | ஸ்நபனாபிஷேகம் |
| பகல் 11:30 மணி | உச்சிக்கால பூஜை |
| பகல் 12:00 மணி | வசந்தமண்டப பூஜை, தொடர்ந்து அம்பாள் திருவீதி வலம் |
| பகல் 12:45 மணி | அருட்பிரசாத விநியோகம் |
| | அன்னதானம் |
| | பகல் வழிபாடு நிறைவு |

## இரவு வழிபாடு

**மாலை 6:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை**

| | |
|---|---|
| மாலை 6:00 மணி | சாயரட்சை பூஜை |
| மாலை 6:30 மணி | விஷேட புண்யாகவாசனம் |
| இரவு 7:30 மணி | இரண்டாங்கால பூஜை |
| இரவு 8:00 மணி | வசந்தமண்டப பூஜை, |
| இரவு 8:30 மணி | அம்பாள் திருவீதி வலம் |
| | அருட்பிரசாத விநியோகம் |
| | அன்னதானம் |
| பகல் 9:00 மணி | இரவு வழிபாடு நிறைவு |

# பன்னாட்டு நாணய நிதியத்தைக் கையாளத் தவறிய தமிழர்கள்?



## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

ஐநா மனித உரிமைகள் பேரவையின் 53வது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இந்தக் கூட்டத்தொடரில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான தனது வாய்மூல அறிக்கையை சமர்ப்பிப்பார்.

கடந்த சில ஆண்டுகளாக மனித உரிமைகள் கூட்டத் தொடரை நோக்கிய தமிழ் மக்களின் கவனக்குவைப்பு ஒப்பீட்டளவில் குறைந்து விடுகின்றது. மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு செல்லும் தமிழ் அரசியல்வாதிகளின் எண்ணிக்கையும் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கி விட்டது. இந்த விடயத்தில் தமிழ்த் தரப்பிடம் ஒருவித சோர்வு அல்லது ஊக்கமின்மை காணப்படுகின்றதா?

இத்தனைக்கும் கடந்த சில ஆண்டுகளாக ஐநா, இலங்கை இனப்பிரச்சனை தொடர்பில் ஒரு பொறிமுறையை உருவாக்கிச் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்து வருகின்றது. இந்தப் பொறிமுறை சிரியா போன்ற இடங்களுக்கு உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறையைப் போன்ற பலமான ஒன்று இல்லைத்தான். அது ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஒன்றுதான். என்றாலும் தமிழர்களுக்கு சாதகமான ஒரு நகர்வு அது. அதில் ஒன்றுமே இல்லை என்று நிராகரிக்க முடியாது. சரியோ பிழையோ, போதுமோ, போதாதோ அது ஈழத் தமிழர்களுக்குச் சாதகமானது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சிகளும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளில் பெறுமதியானவை. எனவே அப்பொறிமுறையை தமிழர்கள் நீண்ட கால நோக்கில் கையாள வேண்டும். ஆனால் அவ்வாறு கையாள்வதற்குரிய அரசியல் தரிசனமோ கட்டமைப்புகளோ வழி வரைபடங்களோ ஈழத்தமிழர்களிடம் உண்டா?

ஐநாவைக்கையாள்வது என்பது அதன் எல்லாப் பரிமாணங்களிலும் வெளியுறவு கொள்கை சார்ந்த ஒரு விடயம்தான். எனவே முதலில் ஈழத் தமிழர்களிடம் ஐநாவும் உட்பட மேற்கு நாடுகளையும் இந்தியாவையும் கையாளத் தேவையான ஒரு வெளியுறவு கொள்கை உண்டா? அந்த வெளியுறவுக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு ஏதாவது கட்டமைப்பு உண்டா?

ஆனால் அவை இரண்டுமே ஈழத் தமிழர்களிடம் இல்லை.சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சுமந்திரன் சொன்னார் வெளியுறவு கொள்கையை வெளிப்படையாக விவாதிக்க முடியாது என்று. ஆனால் அவர் அப்படி சொன்னதன் பொருள் அவரிடம் ரகசியமான ஒரு வெளியுறவுக் கொள்கை உண்டு என்பது அல்ல.அவரிடம் வெளியுறவுக் கொள்கையே இல்லை என்றுதான் பொருள். அப்பொழுதும் இல்லை இப்பொழுதும் இல்லை.

அவர் மட்டுமல்ல பூகோள அரசியல் குறித்து அதிகமாக உரையாடும் கஜேந்திரகுமாரிடமும் ஒரு வெளியுறவு கொள்கை உண்டா? ஏனென்றால் அவர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் வெளிநாடுகளை அணுகும் விதத்தை வைத்து பார்த்தால் அவர்களிடம் அப்படிப்பட்ட வெளியுறவு கொள்கைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சுமந்திரன் மற்றும் சம்பந்தரிடம் மேற்கை நோக்கிய ஒரு வெளியுறவைச் சாய்வு உண்டு. அதேசமயம் தமிழரசு கட்சிக்குள் தனிப்பட்ட உறுப்பினர்களிடம் இந்தியாவை நோக்கிய சாய்வு உண்டு. அது வெளியுறவு கொள்கை சார்ந்த ஒரு நிலைப்பாடு என்பதை விடவும் கட்சிக்குள் தமது தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்கான ஒரு நடவடிக்கை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழரசு கட்சியிடம் ஒரு தெளிவான வெளியுறவுக் கொள்கை உண்டா என்று பார்க்க வேண்டும். அதன் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அது அதிகபட்சம் மேற்கை நோக்கிய ஒரு கட்சிதான். அதனால் அது எப்பொழுதும் யூஎன்பிக்கு இணக்கமான ஒரு கட்சியாகவும் காணப்பட்டது. எனவே தமிழரசுக் கட்சியின் இதுவரை கால வரலாற்றை தொகுத்து பார்த்தால் அதன் வெளியுறவு கொள்கை என்பது மேற்கை நோக்கியதுதான்.

அடுத்ததாக கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரை அவருடையதும் மேற்கை நோக்கிய ஒரு வெளியுறவு கொள்கைதான். அவரிடம் தெளிவான ஒரு வெளியுறவு கொள்கை உண்டோ இல்லையோ என்பது ஒரு புறம் இருக்க, அக் கட்சியின் இதுவரை கால நடவடிக்கைகளை தொகுத்து பார்த்தால் அது திட்டவட்டமாக இந்திய எதிர்ப்பை முன்னெடுக்கின்றது. அது 13ஐ மட்டும் எதிர்க்கவில்லை. இந்தியாவையும் ஓர் எதிரியாகத்தான் பார்க்கின்றது. தனது எதிரிகளை இந்தியாவின் அடிவருடிகள் அல்லது கைக்கூலிகள் என்று கூறுவதன்மூலம் அது இந்தியாவை ஒரு எதிர்த் தரப்பாகவே உருவகப்படுத்துகின்றது. எனவே கடந்த 14 ஆண்டு கால அக்கட்சியின் நடவடிக்கைகளைத் தொகுத்து பார்த்தால், அது மேற்கை நோக்கிய ஒரு கட்சிதான். ஆனால் அக்கட்சிக்கும் தமிழரசு கட்சிக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்னவென்றால், அது திட்டவட்டமாக வெளிப்படையாக இந்திய எதிர்ப்பை காட்டும் ஒரு கட்சி என்பதுதான். தமிழரசுக் கட்சி இந்திய எதிர்ப்பை காட்டவில்லை. குறிப்பாக சம்பந்தர் சுமந்திரன் வெளிப்படையாக இந்திய எதிர்ப்பை காட்டுவதில்லை. ஆனால் நடைமுறையில் அவர்கள் இந்தியாவை விடவும் மேற்கை நோக்கியே அதிகம் சாய்கிறார்கள் என்பதே உண்மை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழரசுக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர்த்துப் பார்த்தால் விக்னேஸ்வரனின் கட்சி ஒப்பீட்டளவில் இந்தியாவை நோக்கிச் சாய்வதாகத் தெரிகிறது. அவர்களிடம் மேற்கை நோக்கிய சாய்வு ஒப்பீட்டளவில் குறைவாகத் தெரிகிறது. 13ஐ முழுமையாக அமல்படுத்துவதற்குரிய ஒரு நடைமுறை வழிவரைபடத்தை விக்னேஸ்வரன் இப்பொழுது முன்வைக்கின்றார். அது இந்தியாவை நோக்கிய ஒரு சாய்வுதான்.

இவை தவிர ஏனைய கட்சிகள் அதாவது ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகின்ற கட்சிகளைத் தொகுத்து பார்த்தால், அவை இந்தியச் சாய்வு நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள்தான். அதில் உள்ள பெரும்பாலான கட்சிகள் முன்பு இந்தியாவோடு சேர்ந்து உழைத்தவை. இப்பொழுதும் இந்தியாவுக்கு விசுவாசமானவை. அதில் உள்ள சில கட்சித் தலைவர்கள் இப்பொழுதும் சில மேற்கத்திய நாடுகளுக்கு போக முடியாத தடை உண்டு. மேலும் அக்கூட்டமைப்புக்குள் இருப்பவை அநேகமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள்தான். அதில் டெலோ இயக்கத்தைத் தவிர ஏனைய கட்சிகளுக்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மக்கள் ஆணை கிடையாது. எனவே தொகுத்துப் பார்த்தால் ஒப்பீட்டளவில் அதிகம் இந்தியச் சாய்வுடைய ஒரு வெளியுறவு கொள்கையை அல்லது வெளியுறவு நிலைப்பாட்டை ஜனநாயகக் கூட்டமைப்புத்தான் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்தக் கூட்டுக்கு ஒப்பீட்டளவில் மக்கள் ஆணை குறைவு. அடுத்த பொதுத் தேர்தலில் டெலோ இப்பொழுது பெற்றிருக்கும் அதே மூன்று ஆசனங்களையும் பெறுமா என்பதையும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

எனவே தமிழ்த் தேசிய பரப்பில் காணப்படும் மூன்று கட்சிகளையும் அல்லது கட்சிக் கூட்டுக்களையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது இதில் ஒப்பீட்டளவில் இந்தியாவுக்கு எதிரான அல்லது இந்தியாவை விடவும் மேற்கே நோக்கி அதிகம் சாய்கின்ற கட்சிகள்தான் பலமாக இருக்கின்றன என்பது தெரிகிறது. அவ்வாறு மேற்கை நோக்கிய வெளியுறவு நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன என்றால் மேற்படி கட்சிகள் ஐநாவையும் கட்டாயம் கையாள வேண்டும். ஏனென்றால் மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள்தான் ஐநாவும் வருகின்றது. ஆனால் மேற்படி கட்சிகளிடம் ஐநாவைக் கையாள்வதற்கான சரியான வழி வரைபடம் ஏதும் இருக்கின்றதா?

இங்கு ஒரு முக்கியமான விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஐநா கூட்டத்தொடரை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மூன்றையும் இணைத்து ஒரு கடிதம் எழுதப்பட்டது. கடிதத்தில் ஒரு முக்கியமான விடயம் கேட்கப்பட்டது. பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பதே அது. அதாவது பொறுப்புக்கூறல் ஆனது மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே இருக்குமாக இருந்தால் தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் நீதி கிடைக்காது. ஐநா மனித உரிமைகள் பேரவை எனப்படுவது வரையறுக்கப்பட்ட மக்கள் ஆணையை கொண்ட ஒரு கட்டமைப்பு. அதைவிடப் பலமான கட்டமைப்புகள் ஐநாவில் உண்டு.ஐநா பொதுச்சபை, ஐநா பாதுகாப்புசபை போன்றவையே அவை. எனவே பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே எடுத்து ஐநா பொதுச் சபையானது அதனை சர்வதேச நீதிமன்றங்களை நோக்கிக் கொண்டு போக வேண்டும் என்ற தொனிப்பட மேற்படி கடிதம் எழுதப்பட்டது. இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு கிட்டத்தட்ட முப்பது மாதங்கள் ஆகின்றன. ஆனால் அக்கோரிக்கையை நோக்கி மேற்படி கட்சிகள் எந்தளவுக்கு உழைத்திருக்கின்றன?

எந்த ஒரு கட்சியும் அவ்வாறு உழைக்கவில்லை என்றே தெரிகிறது. அவ்வாறு உழைத்து இருந்திருந்தால் ஒரு பொருளாதார நெருக்கடியின்போது இலங்கை அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்பட்ட மேற்கத்திய நாடுகள் இனப் பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களை பிரயோகித்து இருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான நிர்பந்தங்கள் எவையும் பிரயூகிக்கப்படவில்லை என்பதைத்தான் நாட்டில் நடக்கும் சிங்கள பௌத்த மயமாக்கல் நமக்கு உணர்த்துகின்றது. பன்னாட்டு நாணய நிதியம் உலக வங்கி போன்றன பெருமளவுக்கு மேற்கத்திய ராஜதந்திர பரப்புக்குள் காணப்படும் உலகப் பொதுக்கட்டமைப்புகள்தான். எனவே மேற்கைக் கையாள்வது என்ற நடைமுறையை வெளிக்காட்டும் தமிழ்க் கட்சிகள் பன்னாட்டு நாணய நிதியத்தை வெற்றிகரமாக கையாண்டிருக்கின்றனவா? அல்லது பலம்மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதை செய்திருக்கின்றதா?

அவ்வாறு செய்து இருந்திருந்தால் நிதி உதவியும் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நிபந்தனையும் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட முடியாதபடி பிணைக்கப்பட்டு இருந்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு பிணைக்கப்படவில்லை. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து ரணில் விக்ரமசிங்கக் காப்பாற்றுவதற்கான மேற்கு நாடுகளின் உதவி எனப்படுவது, தமிழ்மக்களின் மேற்கை நோக்கிய அணுகுமுறையின் தோல்வியைக் காட்டுகிறது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவிகள் கிடைக்கும் ஒரு காலகட்டத்திலேயே சிங்கள பௌத்தமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றமை என்பது அந்தத் தோல்விக்குச் சான்று. அரசாங்கம் ஒருபுறம் ஐநாவின் நிலைமாறு கால நீதிக்கான கட்டமைப்புகளில் ஒன்று ஆகிய உண்மை மற்றும் நீதிக்கான ஆணைக் குழுவை உருவாக்கப்போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் அதற்கு சமாந்தரமாக,சிங்களபௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. அப்படியென்றால், அரசாங்கம் பொறுப்புக் கூறலுக்கு அதாவது நிலைமாறுகால நீதிக்கு விசுவாசமாக இல்லை என்று பொருள்.

அரசாங்கம் அப்படித்தான் இருக்கும். சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு என்பது எப்பொழுதும் அப்படித்தான் இருந்திருக்கின்றது. அது தன் வாக்காளர்களுக்கு உண்மையாகவே இருக்கும். ஆனால் தமிழ்க் கட்சிகள் அவ்வாறு தமக்கு வாக்களித்த மக்களுக்கும், அந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய நீதிக்கும் உண்மையாக இருக்கின்றனவா?



# தென்னிலங்கை ஊடகங்களுக்கு – ஒரு திறந்த மடல்



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

- இனவாதமும் மதவாதமுமே அரசியல் முதலீடு.
- போர் மௌனிக்கப்பட்டது. ஆனால் தீர்வு இல்லை.
- அதிகாரமளித்தல் நகைச்சுவையாகிவிட்டது.

இலங்கையின் சுதந்திர கால வரலாற்றில் இன்றைய நிகழ்கால தென்னிலங்கை அரசியல் ஒட்டு மொத்த மக்களையும் நாட்டையும் பழி தீர்க்கும் வன்ம அரசியலின் மொத்த உருவமாக உள்ளது. ரணில் - ராஜபக்ஷ ஆளும் தரப்பினர் தமது அரசியலின் நிகழ்கால எதிர்கால இருப்புக்கான சட்டரீதியான இரும்புக் கவசத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

- சட்டவாக்க கவசத்தை நோக்கி ரணில் - ராஜபக்ஷ அணியினர்.

அந்த வரிசையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஊழல் எதிர்ப்புச் சட்டம் ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு [BRC] ஸ்தாபனம் என வரிசையாக அவசர அவசரமாக சட்ட ஏற்பாடுகளை கொண்டு வர முயல்கின்றனர்.

இது மனச் சாட்சி இல்லாதவர்களின் "வரலாற்று ஜனநாயக படுகொலையாகும்" என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. ரணில் - ராஜபக்ஷக்களின் இந்த நகர்வுகள் வெற்றி பெறுமாக இருந்தால் ஒன்றல்ல எத்தனை "அரகலயாக்கள்" உருவாகினாலும் இவர்களது கவசத்திற்குள் இருந்து நாடு மீள்வது கடினமாகவே இருக்கும்.

ஏனெனில் இவை அணைத்தும் சட்ட ரீதியாக நிபுணத்துவமிக்கவர்களால் வடிவமைக்கப்படும் விடயங்களாகும்.

- ராஜபக்ஷக்களின் வழமையான அரசியல் தொடர்கிறது.

"சிஸ்டம் சேன்ஜ்" எனக் கூறி ஒரு வருடத்திற்கு முன் மடை திறந்த வெள்ளம் போல் மக்கள் திரண்டனர். நாட்டின் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறினார்.பிரதமர் இராஜினாமா செய்தார். அடுத்தடுத்து மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால் இந்த மாற்றங்கள் சூறாவளியை எதிர்த்து நிற்பதற்குப் பதிலாக நிலத்தோடு ஒட்டிப் படுத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நிகழ்வுகளாகவே இருந்தன என்பதை ராஜபக்ஷக்களின் அணியினர் அன்று பதுங்கியதும் பதுங்கியவர்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்பதும் உணர்த்தி நிற்கின்றன.

"அரகலய" சூறாவளிவந்தவேகத்தில் போய்விட்டது. ராஜபக்ஷக்களின் வழமையான அரசியல் ரணில் விக்ரமசிங்கவின் நிழல் அரசில் கோலோச்சிக் கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது ரணில் மற்றும் ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சி தொடர்ந்தும் அரசியலில் தம்மை தக்க வைத்துக் கொள்வதற்கு அவர்கள் முன் நகர்த்தும் அரசியல் காய்களின் தாத்பரியத்தை விளங்கிக் கொள்ளலாம்.

ரணில் - ராஜபக்ஷக்களின் நகர்வுகள் தென்னிலங்கை அரசியலை கொதி நிலைக்குள் தள்ளியுள்ளது. அதே வேளையில் ஒட்டு மொத்த மக்களின் இயங்கியலையும் தமக்கான ஜனநாயக இருப்பையும் காப்பாற்றியாக வேண்டும் என்ற கோபாவேசத்திற்குள் நாட்டையும் மக்களையும் தள்ளியுள்ளது.

- ஊடகத்துறையின் எதிர் காலம்?

இந்த விடயத்தில் ஊடகத்துறையினரின் எதிர் காலமே ஒரு நிச்சயமற்ற நிலையில் ஊசலாடிக் கொண்டிருக்கின்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. மொத்தத்தில் இந்த சட்டவாக்கங்கள் ஊடகத்துறையினரைக் குறிப்பாக இலத்திரனியல் ஊடகத்துறையினரை "வாழ்வா சாவா" என்ற நிலைக்கு தள்ளியுள்ளது.

- 1958 இனக் கலவரம்.

ஊடக அடக்குமுறை என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றுடன் இரண்டறக் கலந்த ஒரு விடயமாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட 1958 இனக் கலவரத்தை அடுத்து சேர் ஜோன் கொத்தலாவல பத்திரிகை நிருபர்களை அழைத்து கலவரம்குறித்த செய்திகளை வெளியிட வேண்டாமென கட்டளையிட்டார் என விதாச்சி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

- லேக் ஹவுஸ் தேசியமயம்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா 1970 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். 1973 இல் லேக் ஹவுஸ் குழுவை தேசியமயமாக்கினார்.

அவ் வேளையில் "தி நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை மே 8, 1974, ஆம் ஆண்டு பின்வருமாறு எழுதியது.

- "ஆசியாவிலேயே மிகவும் உயிரோட்டமான பத்திரிகைகளில் ஒன்றான இலங்கைப் பத்திரிகை, அரசாங்கத்தால் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளது."

சுதந்திர பத்திரிகையான சன் குழுமம் 1974இல் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் அவசரகால விதிமுறைகளின் கீழ் சீல் வைக்கப்பட்டது.

உணவுப் பற்றாக்குறை மற்றும் பொருளாதார சிக்கல்கள் குறித்து அதிகரித்து வரும் விமர்சனங்களுக்கு உள்ளான பிரதமர், செய்தித்தாள்கள், "வேண்டுமென்றே உண்மைகளை திரிபுபடுத்திப் பரப்புரை செய்கின்றன" என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

அந்தக் காலகட்டத்தில் டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகை மாத்திரமே போட்டியாளர் நிலையில் இருந்தது. ஆனால் அப் பத்திரிகை அவ்வேளையில் நிதி நெருக்கடிக்குள் சிக்குண்டு இருந்ததினால் அரசாங்க ஆதரவு நிலைப்பாட்டினை எடுத்திருந்தது.

நாட்டின் ஒரே இலத்திரனியல் ஊடகமான அரச சார்பான இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் (SLBC) இருந்தது.

இது போன்ற பல சம்பவங்கள் இலங்கை அரசியலில் பதிவுகளாக இருக்கின்றன. இவை அனைத்தும் அவ்வப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மேற் கொண்ட சம்பவங்களாக பதிவாகியுள்ளன.

- ரணில் - ராஜபக்ஷக்களின் நகர்வுகள் அபாயமானது.

ஆனால் தற்போதைய நிலை அவ்வாறானதல்ல. ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கம் இணைந்து தமது நிகழ்கால எதிர்கால அரசியல் இருப்புக்காகவும் இலங்கையின் அரசியலை தீர்மானமிக்க தமக்கான திசை நோக்கி நகர்த்துவதற்குமாக மேற் கொள்ளப்படும் நகர்வாக இருக்கின்றது.

இந்த நகர்வுகள் நாட்டின் ஒட்டு மொத்த மக்களையும் அராஜகப் பிடிக்குள் தள்ளிவிடும் போக்கினைக் கொண்டது என்பதால் நாட்டின் அனைத்து தரப்பினரும் எதிர்த்து நிற்கின்றனர். மக்களும் ஊடகத்தறையினரும் இவ்விடயத்தில் வெற்றி பெற்றாக வேண்டும்.

இந்த வெற்றியுடன் ஊடகத்துறை தன்னை சுய பரிசோதனைக்கு உற்படுத்திக் கொள்ளுமா என்ற கேள்வியை இவ்வேளையில் முன் வைப்பது சிறந்ததாக இருக்கும்.

- இனவாதமும் மதவாதமுமே அரசியல் முதலீடு.

ஏனெனில் சுதந்திர இலங்கை கடந்த 75 வருடங்களாக "ஜனநாயகம் இல்லாத ஜனநாயகத்தில்", அதாவது மாய சுதந்திரத்திற்குள் மூழ்கிக் கிடந்துள்ளோம் என்று "அரகலயா"க்களின் எழுச்சியுடன் தென்னிலங்கை ஊடகங்களில் பெரிதாகப் பேசப்படுகின்றது. அதாவது இலங்கையின் தென்னிலங்கை அரசியல் சக்திகள் இனவாதத்தையும் மதவாதத்தையும் அரசியல் முதலீடாகக் கொண்டே அரசியல் வெற்றிகளை ஈட்டி வந்தனர்.

தென்னிலங்கை மக்களை இவ்வாறான ஒரு மாயைக்குள் வைத்த பெருமை கடந்த 75 வருடத்திற்கு மேற்பட்ட கால வரலாற்றில் தென்னிலங்கை ஊடகங்களுக்கும் பெரும் பங்குண்டு. அந்தளவுக்கு தென்னிலங்கை ஊடகங்கள் மக்களை இருட்டுக்குள் தள்ளி ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நடந்ததுடன் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும் அரசியல்வாதிகளுடன் ஊடகங்களும் பொறுப்பேற்க வேண்டும்.

அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப பெரும்பாலான தென்னிலங்கை ஊடகங்கள் செயற்பட்டன என்பது பரம இரகசியமில்லை.

கொழும்புப் பத்திரிகைகள்

- இலங்கையில் ஊடகத்துறை இனரீதியாகப் பிளவுபட்டுக் கிடக்கின்றது. தமிழர் விவகாரங்கள், தமிழர் அரசியல் அபிலாஷைகள் என அனைத்து விடயங்களையுமே குதர்க்கமாகப் பார்க்கும் போக்கினை காலம் காலமாக கொழும்புப் பத்திரிகைகள் தமது ஊடகக் கொள்கையாகவே கொண்டுள்ளன.
- இதனைச் சரியாகக் கணக்கிட்டு 1923 இல் அதாவது 100 வருடங்களுக்கு முன் "குரங்கெல்லாம் ஒரே முகம்" என்று திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதியுள்ளர். இந்த முகம் இன்றும் தொடர்கின்றது.
- வடமாகாண முதலமைச்சராக இருந்த முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி கண்டியில் உள்ள பௌத்த மதபீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது,
- கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் எம்மை பிரிவினைவாதிகள், இனவாதிகள் நாட்டைப் பிரிக்க முற்படுபவர்கள் என பிரசாரங்களை முன்னெடுக்கின்றன. நாம் பிரிவினைவாதிகள் அல்ல, இனவாதிகள் அல்ல என்று குறிப்பிட்டார்.
- கொழும்புப் பத்திரிகைகள் 100 வருடங்களுக்குப் பிறகும் தம்மை மாற்றிக் கொள்வதற்குத் தயாராக இல்லை என்பதையே முன்னாள் வட மாகாண முதலமைச்சரின் கூற்றும் உறுதிப்படுத்துகின்றது.

தென்னிலங்கையில் ஊடக அரசியல் எவ்வளவு ஆழ ஊடுருவியுள்ளது என்பதும் பரம ரகசியம் இல்லை.

- இலங்கையில் 1994 இல் திருமதி குமாரதுங்கவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு ஊடகங்கள் முக்கிய பங்கு வகித்தன.
- நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டு வந்ததில் ஊடகங்களின் பங்கு அளப்பரியது.
- அண்மையில் Change Of System "அரகலயா" கருத்தியல் நாடுபூராவும் வியாபிக்கவும் நூறு நாட்களுக்குள் வெற்றியை எட்டுவதற்கும் ஊடகங்களின் பங்கு அளப்பபரியது.
- ஒரு நாடு தகுதியற்ற தலைவர்களால் நாசமாய்ப் போவதில்லை.

தகுதியற்ற தலைவர்களை தேர்ந்தெடுக்கும் மக்களாலேயே அந்த நாடு நாசமாய்ப் போகிறது." என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்படியானால் இலங்கையில் தகுதியான தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்திர இலங்கையில் ஊடகங்கள் மக்களுக்கு வழி காட்டத் தவறிவிட்டன. ஏனெனில் ஊடகங்கள் மக்கள் குறித்தோ அல்லது நாட்டின் எதிர்காலம்குறித்தோ சிந்தித்து மக்களின், நாட்டின் குரலாக செயற்படவில்லை. பெரும்பாலும் அரசியல்வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் குரலாகவே செயற்பட்டன.

- எனவேதான் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ போன்றதொரு தலைவரை உருவாக்க தென்னிலங்கை ஊடகங்களால் முடியவில்லை. இன்று கூட முடியவில்லை.

அதன் கோரவிளைவுகளைநாடும்,மக்களும் இன்றுஅனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களுடன் ஊடகங்களின் பயணமும் பெரும்பாலும் ஒத்திசைவாகப் பயணித்ததன் விளைவு இன்று நாடு "தோற்றுப் போன" நாடாக உலக அரங்கில் நிற்கின்றது.

இதுகுறித்து தென்னிலங்கை ஊடகங்கள் இன்று பெரிதாகப் பேசுகின்றன.

சுதந்திர இலங்கையின் 75வருட கால அரசியலில் மாற்றம் அவசியம் வேண்டும் என்றும் பரப்புரை செய்கின்றன.

- மக்களின் குரலாக தென்னிலங்கை ஊடகங்கள்.

அந்தவகையில் ஊடகங்கள் முதன் முறையாக மக்களின் குரலாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது. எனவேதான் ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கத்தின் ஒட்டு மொத்த கோபமும் ஊடகங்கள் மீதும் பாய்ந்துள்ளது.

அதே வேளையில் மக்களின் சிந்தனை அதன் விளைவாக ஆளும் வர்க்கத்திற்கு எதிராக எழுகின்ற தன்னெழுச்சிப் போராட்டங்கள், ஊழலுக்கு எதிரான கோசங்கள் என அனைத்து ஜனநாயக விழுமியங்களையும் சட்டரீதியலான கவசத்திற்குள் நிரந்தரமாக முடக்கிவிட ரணில் - ராஜபக்ஷ அணியினர் முயல்கின்றனர்.

ஊடகங்களுக்கு எதிரான பொறிமுறைக்கு சிங்கப்பூர் நாட்டை உதாரணம் காட்டும் ரணில் - ராஜபக்ஷ அணியினர் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ அவர்களின் நடைமுறை செயற்பாடுகள் குறித்து பேச மறுக்கின்றனர்.

தொழிலதிபர் நண்பருடன் விடுமுறைக்கு சென்ற சிங்கப்பூர் துணை அமைச்சர், திரும்பியபோது கைது செய்யப்பட்டார்.

அவரைக் கைது செய்து விசாரித்தபோது, "நீங்கள் ஒரு தொழிலதிபருடன் விடுமுறையில் சென்றிருந்தீர்கள், உங்கள் செலவுகள் அனைத்தையும் அவர் செலுத்தினார். அதுதான் ஊழல் என நிரூபிக்கப்பட்டது.

சிங்கப்பூரின் இத்தகைய ஆட்சியை நடைமுறைப்படுத்த ரணில் - ராஜபக்ஷ அணியினர் தயாராக இருக்கின்றனரா.? நடைமுறைப்படுத்தினால் ஆட்சியில் ஒரு சிலரே மிஞ்சுவர். பெரும்பாலானவர்கள் சிறைக் கம்பிகளுக்குள் இருக்க வேண்டி வரும்.

***(தொடர்ச்சி _13_ பக்கம்)***

## ஸ்ரீலங்கா முன்னை நாளி தமிழ் பொலிஸ் அலுவலர் கழகம் (கனடா)
## Sri Lankan Ex-Tamil Police Officers' Club (Canada)

**ஸ்ரீலங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், விளையாட்டுப் போட்டியும் 2023**



**காலம் :**
**ஜுலை 01, 2023 (சனிக்கிழமை)**
**காலை 10:00 மணிக்கு**

**இடம்:**
**Morning Side Parking lot # 5**
**Morningside / Ellesmere**

இவ் ஒன்றுகூடலில் சகல வயதினருக்கான விளையாட்டுப் போட்டிகளும், விசேட போட்டிகளாக கயிறு இழுத்தல், உதைபந்தாட்டம், கிறிக்கெற், தம்பதியர்களுக்கான போட்டிகள், வேகநடைப் போட்டி என்பன நடைபெற உள்ளன. பங்குபெற விரும்புவோர் மைதானத்தில் காலை 10 மணிக்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
இடைவேளையின் போது அனைவருக்கும் மதியபோசனமும், B.B.Q உம், குளிர்பானமும் வழங்கப்படும்.
வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.

இவ் ஒன்றுகூடலுக்கு கழக உறுப்பினர்கள், அவர்கள் குடும்பத்தினர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் திரண்டு வருகை தந்து ஒன்றுகூடலைச் சிறப்பிக்குமாறு நிர்வாக சபையினர் அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர்.
*Canada Day Celebration* மிகச்சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.



மேலதிக தொடர்புகளுக்கு:
சாம். தர்மகுலசிங்கம் : 647 - 882 - 1050  கே.சிவபாலன் : 905 - 813 - 0605
எஸ். அரியதாஸ் : 416 - 321 - 5703  கே.மனோகரன் : 647 - 720 - 5627






## Dr. புஷ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates
**Dentist**

**New Patients Welcome**
Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday
by Appointment
only



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
**905-201-8900**

(_11_ பக்கத் தொடர்ச்சி)

## தென்னிலங்கை ஊடகங்களுக்கு – ஒரு திறந்த மடல்

• மலிந்துவிட்ட ஊழல்.

இன்றும், நாட்டின் கடன் சுமையின் பின்னணியில், "பூண்டு ஊழல்", " சீனி ஊழல்" போன்ற மோசடிகள் மூலம், உயர்மட்ட அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இந்த நாட்டின் வளங்களை தங்கள் ஊழல் நடவடிக்கைகளால் தொடர்ந்து கொள்ளையடித்து வருகின்றனர்.

ஊழல்களினால் மக்களின் உயிர்களும் பறிபோய்க் கொண்டிருக்கின்றது.

இத்தகைய அராஜகப் போக்கில் இருந்து நாடும் மக்களும் மீட்டு எடுக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இருக்க முடியாது.

• இனவாத மதவாத அரசியலில் இருந்தும் விடுதலையாக வேண்டும்.

அதே வேளையில் நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க ஊழலுக்கெதிரான செயற்பாடுகளுடன் அரகலயாக்களின் சிஸ்டம் சேன்ஜ் கருத்தியல் மாத்திரம் போதாது. நாடும் மக்களும் இனவாத மதவாத அரசியலில் இருந்தும் விடுதலையாக வேண்டும். தென்னிலங்கை மக்கள் இது குறித்து ஆழமாகவே சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

ஆனால் இந்தச் சிந்தனையை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும் போக்கு தென்னிலங்கை ஊடகத்துறையில் விதைக்கப்படுகின்றது. இது மீண்டும் இனவாத, மதவாத அரசியல் ஊடாக ஆட்சிபீடம் ஏறி அரசோச்ச முயலும் சக்திகளுக்கு பாதை அமைத்துக் கொடுப்பதாக அமைகின்றது.

இது தென்னிலங்கை பேசுகின்ற எதிர்பார்க்கின்ற "சிஸ்டம் சேன்ஜ்" கருத்தியலுக்கு மாறான பழைய போக்கிற்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதாக அமைந்துவிடும்.

இலங்கை "தோற்றுப்போன" அரசாக உருவெடுக்க இனவாத மதவாதத்துடன் கண்மூடித்தனமான ஊழல் அரசியல் மாத்திரமல்ல தமிழர் விவகாரத்துக்கு நிரந்தரமான தீர்வினைக் காணத் தவறியதும் காரணம் என்பது தென்னிலங்கை மக்கள் மாத்திரமல்ல தென்னிலங்கை ஊடகத்துறையினரும் பட்டறிந்து கொண்ட உண்மையாகும்.

• போர் மௌனிக்கப்பட்டது ஆனால் தீர்வு இல்லை.

போர் மௌனமாக்கப்பட்டது என்பது உண்மை. ஆனால் தமிழர் விவகாரத்துக்கான தீர்வும் இன்றுவரை காணப்படவில்லை என்பதும் அதே அளவு உண்மையாகும். ஏனவேதான் 2009 ஆம் ஆண்டில் இருந்து தற்போதைய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க வரை தமிழர் விவகாரத்துக்கு தீர்வு காண்பது குறித்து பேசி வருகின்றனர்.

• இலங்கையில் அதிகாரமளித்தல் என்பது நகைச்சுவையாகிவிட்டது.

• எண்பதுகளின் பிற்பகுதியில் மாக-ாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இந்த நிறுவனங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

• உதாரணமாக, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பெரும்பாலான அதிகாரங்கள் படிப்படியாக மத்திய அர-சால் கையகப்படுத்தப்பட்டன.

அரசியலமைப்பின் 13வது திருத்தம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அது ஒருபோதும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

• இதுவே இலங்கையில் மோதல் சூழ்நிலைக்கு காரணமாக அமைந்தது.

• அரசியல் கட்சிகளும், சிவில் சமூகங்களும் 13வது திருத்தத்தை அமுல்படுத்தக் கோரிபோராடினாலும் இந்தகுரல்களுக்கு ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் செவிசாய்க்கவில்லை.

அதே வேளையில் அதிகாரமளித்தல், அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அனைவருக்கும் சம உரிமைகள் ஆகியவற்றின் அவசியத்தை ஊடகங்கள் கவனம் செலுத்தினாலும், கடந்த 30 வருடங்களில் ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமும் செவிசாய்க்கவில்லை.

சிவில் சமூகமும் ஊடகங்களும் ஒன்றிணைந்து உண்மையான நிலைமையை அம்பலப்படுத்தி, மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் போராடுவதற்கு மக்களைத் தூண்டினால் மட்டுமே இந்த செயல்முறையை சிறப்பாகச் சாதிக்க முடியும்.

• அமைச்சர் மனுஷநாணயகார.

ஆனால் துரதிஸ்டவசமாக பெரும்பாலான தென்னிலங்கை ஊடகங்கள் அதிகாரப்பரவலாக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளன. ஊடகவியலாளர் அமைப்பொன்றின் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் மனுஷநாணயகார 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதுபற்றி தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு ஊடகத்துறையினர் சாதகமாக இல்லை என்பதை பகிரங்கமாகக் கூறியதை இங்கு பதிவு செய்வது பொருந்தும்.

• தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காணாதவரை இலங்கைக்கு மீட்சி இல்லை.

தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காணாதவரை இலங்கை காணவிழைகின்ற பொருளாதார மீட்சியோ அல்லது சுபீட்சமோ அல்லது "சிஸ்டம் சேன்ஜ்" என்பன நிலைக்கப் போவதில்லை. ஏனெனில் இலங்கை மீண்டும் இனவாத மதவாத அரசில் சேற்றுக்குள் மூழ்கடிக்கப்படவே வழிவகுக்கும்.

"போர் மனிதர்களின் மனதில் தொடங்குவதால், அமைதிக்கான பாதுகாப்பை உருவாக்குவதும் மனிதர்களின் மனதில் தான்" உள்ளதுஎன்று யுனெஸ்கோவின் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. அத்தகைய விசாலமான மனதைக் கொண்ட அரசியல் கலாசாரமும் அதனை காத்திரமாக முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஊடக கலாசாரமும் உயிர்பெற வேண்டும். அந்தவகையில் அதிகாரமளிப்பதற்கான மாற்றத்தை எளிதில் அடைய, ஊடகங்கள் "குரலற்றவர்களின் குரலாக" ஒலிக்க வேண்டும்.

எனவே ஊடகத்துறை என்பது நாட்டையும் மக்களையும் நெறிப்படுத்தும் புனிதப் பணியாகும். தென்னிலங்கை ஊடகங்கள் நூற்றாண்டு கால சித்தாந்தத்தில் இருந்து விடுபட்டு ஒரு புதிய இலங்கையை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.


Email : vathevaraj@gmail.com
21st June 2023



உதயனின் பிரத்தியேகச் செய்தி


# மனித புதை குழிகள் மர்மங்களை மூடி மறைக்கும் இலங்கை அரசின் நடவடிக்கை அம்பலம்

சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்




மன்னார் முதல் மாத்தளை வரை ஒரே கதை தான். மனித புதை குழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன, குற்றவாளிகள் ஒரு போதும் கண்டுபிடிக்கப்படுவதில்லை, தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத கலாச்சாரம் தொடருகிறது, அதேவேளை பாதிக்கப்பட்டவர்கள் தலைமுறைகளாக வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

அவ்வகையில் இலங்கையின் மனித புதை குழிகளில் கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு எலும்புக்கூடு அல்லது எச்சங்களில், அரச பாதுகாப்பு படையினரின் தொடர்பு அல்லது அதில் அவர்கள் உடந்தையாக இருந்துள்ளதை தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. அது மக்கள் விடுதலை முன்னணியின் எழுச்சியோ அல்லது வடக்கு கிழக்கில் இடம்பெற்ற ஆயுத போராட்டமோ எதுவாக இருந்தாலும், நிலை என்னவோ ஒன்று தான்.




யாழ்ப்பாணம் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதை குழிகளை யாராவது மறக்க முடியுமா? அது தொடர்பிலான முழுமையான விசாரணை மற்றும் நடவடிக்கை இன்றுவரை இல்லை என்பதே உண்மை.

இப்போது அல்லைப்பிட்டியில் ஒரு கட்டட வேலைகள் இடம்பெறும் போது அங்கும் எலும்புக்கூடு மற்றும் இதர எச்சங்கள் காணப்பட்டுள்ளன. இதையடுத்து அந்த இடம் சுற்றி வளைக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்து என்ன நடக்கும் என்பது ஊரறிந்த விடயமே.

இந்நிலையில் ஐந்து மனித உரிமை அமைப்புகள் நாடு தழுவிய அளவில் நடத்திய ஒரு ஆய்வில், மனித புதை குழிகளின் பின்னணியிலுள்ள உண்மைகளை கண்டறிவதில் இலங்கை அரசின் தோல்வியை அம்பலப்படுத்தியுள்ளது. மிகவும் சிரத்தையுடன் ஆழமாக செய்யப்பட்ட இந்த ஆய்வில் - அந்த விசாரணைகள் தொடர்பில் அரசின் தொடர்ச்சியான தலையீடு சீரான வகையில் இருந்துள்ளதை அம்பலப்படுத்தியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதில் உலகளவில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது என்று ஐ நா அறிக்கை ஒன்று கூறுகிறது. அந்தளவிற்கு நாட்டில் நிலைமை மோசமாக உள்ளது என்பது வெட்டவெளிச்சமாகிறது. அதாவது நாட்டில் ஒருவர் காணாமல் போனால், அவரை கண்டுபிடிப்பது என்பது நடைபெறாத ஒன்று என்பதையே இந்த ஆய்வறிக்கை வெளிப்படுத்துகிறது.

பெரும்பாலான சம்பவங்களில் தொடர்புடையவர்கள் அல்லது தவறிழைத்தவர்கள் அரச பாதுகாப்பு படையினர் என்பதால், விசாரணைகளில் அரசியல் தலையீடு ஏற்பட்டு தவறு செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத காலாசாரம் நிலவுகிறது என்று அந்த ஐந்து நிறுவனங்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

"பொறுப்புக்கூறல் என்பது கடந்த காலத்தை கையாள்வதற்கான முயற்சிகளில் அடிப்படை இடைவெளியாக உள்ளது. மேலும், தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன்னர் நிறுத்தப்படாத வரையில், இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தையோ அல்லது நிலையான சமாதானத்தையோ எட்ட முடியாது" என்று ஐ நா மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளர் நடா யூசூப் அல் நஷீஃப் அம்மையார் இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் சூழல் தொடர்பிலான, தமது பேரவையின் வாய்மொழியான கருத்துக்களை புதன்கிழமை (21) வெளியிடும் போது தெரிவித்தார்.

நாட்டில் பல இடங்களில் மனித புதை குழிகள் இருப்பது அறியப்பட்டாலும், குறைந்தது 20 புதை குழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவற்றை தோண்டி எடுத்து உண்மைகளை கண்டறிவதில் தோல்வியே ஏற்பட்டுள்ளது என்றும் அந்த ஆய்வறிக்கை கண்டறிந்துள்ளது.



"மூன்று தசாப்தங்களிற்கு பிறகும் இருபது இடங்களில் முயலப்பட்ட தோண்டலிலும், ஒரு சில உடல்களே அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தீவு முழுவதும் ஆழமில்லாத பல புதையிடங்களில் பல்லாயிரக்கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிவோம், ஆனாலும் இந்த விடயம் தொடர்பில் ஏற்பட்டு மிகவும் சொற்ப முன்னேற்றத்தை துரதிஷ்டம் என்று தெளிவாக எம்மால் சொல்ல முடியாது - அதற்கான அரசியல் விருப்பமோ உறுதிப்போடோ இல்லை என்பதே உண்மை" என்கிறார் காணாமல் போனவர்கள் குடும்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிட்டோ ஃபெர்ணாண்டோ.

இதேவேளை, வியாழனன்று (22) கொழும்பில் முதுகுத்தண்டை உறைய வைக்கும் ஆவணப்படும் ஒன்றும் இது தொடர்பில் திரையிடப்பட்டது. "தெளிவான பார்வையில் - இலங்கையின் மனித புதை குழிகளின் பின்னர் இருக்கும் உண்மைகள்" எனும் தொனிப்பொருளில் தயாரிக்கபட்ட இந்த ஆவணப்படம் செய்தியாளர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், காணாமல் போனோரின் உறவினர்கள் மற்றும் இதர பிரமுகர்கள் முன்னிலையில். திரையிடப்பட்டது. இதில் இலங்கையில் காணமல் போனவர்கள் மற்றும் மனித புதை குழிகள் ஆகியவை இடையேயான தொடர்பு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நெருக்கமானவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் மூலம் தெளிவாக வெளிக்கொண்டுவரப்பட்டது. பல்வேறுபட்ட தரவுகள் மற்றும் சான்றுகள் மூலம் விசாரணைகளில் அரசின் தலையீடும் மற்றும் அதை முடிக்க முயன்ற செயல்கள் ஆகியவை வெளியுலகிறது தெரியப்படுத்தப்பட்டது.

இந்த ஆவணப்படத்தில் கோட்டாபய ராஜபக்ச சந்தேகத்திற்குரிய பங்கு மீண்டும் வெளிச்சம் போட்டு காட்டப்பட்டது.

கடந்த 2013ஆம் ஆண்டு மாத்தளையிலுள்ள ஒரு மனித புதை குழியிலிருந்து 155 உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டத்து தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று, பதவியிலிருந்து விரட்டப்பட்ட கோட்டாபய ராஜபக்சவை சந்தேக நபராக ஏற்கனவே பெயரிட்டுள்ளது. 1989ஆம் ஆண்டு மாத்தளையில் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போனபோது அவர் அந்த மாவட்டத்திற்கான இராணுவ ஒருங்கிணைப்பாளராக இருந்தார். அந்த சமவம் தொடர்பில் தவறிழைத்தவர்கள் மற்றும் அவர் மீதான விசாரணைகள் எந்தளவில் உள்ளது என்பதை தெரிவிக்க வேண்டு ஐ நா வலுநர்கள் இலங்கை அரசிற்கு எழுதினால் மௌனமே அதற்கு பதிலாக இருந்தது.

மாத்தளையில் காணாமல் போனவர்களின் குடும்பத்தார் அங்கு காணப்பட்ட மனித புதை குழி வழக்கை மேற்கொண்டு எப்படி முன்னெடுத்துச் செல்வது என்று கூட்டாக விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த கூட்டறிக்கை வெளியானது.

"ஜே வி பி காலத்தில் இடம்பெற்ற பெரிய அளவிலான படுகொலை அட்டூழியங்கள் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ச உட்பட அதில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மீதான விசாரணை உரிய முறையில் நடைபெற்று சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்தால், உள்நாட்டு யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித படுகொலைகளையும், அதில் ஈடுபட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை உட்படுத்தப்படாத நிலைமையையும் தவிர்த்திருக்க முடியும். பொறுப்புக்கூறல் என்பது ஒரு தெரிவான நடவடிக்கை அல்ல, அது அனைத்து இலங்கையர்களுக்குமான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதாகும்" என்கிறார் தென் ஆப்ரிக்காவை தலைமையகமாக கொண்டு இயங்கும் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயல்திட்டத்தின், தலைமைப் பணிபாளர் யாஸ்மின் சூக்கா கூறுகிறார்.

இப்படியானாவை மீண்டும் இடம்பெறாது என்பதற்கான உத்தரவாதம் ஏதுமில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் மனித புதை குழிகள் எங்கு கண்டுபிடிக்கப்பட்டாலும் சரி, அது தொடர்பிலான விசாரணைகளின் குரல்வளைகள் நெறிக்கப்பட்டுள்ளன. "இலங்கையில் மனித புதை குழிகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் அதற்கான அரசியல் திடசங்கற்பம் முற்றாக இல்லை" என்று மனித உரிமைகள் மற்றும் வளர்ச்சி மையத்தின் செயல் இயக்குநரும் மூத்த சட்டத்தரணியுமான கே. எஸ். ரட்ணவேல் தெரிவித்தார். மனித புதை குழிகள் தொடர்பில் பல குடும்பங்களிற்காக அவர் நீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார்.



(தொடர்ச்சி _23_ பக்கம்)




அனவரும் ஒன்று சேரும்போது எங்களுக்காக ஒரு நகரத்தை வெல்ல முடியும்.

பின்வரும் விடயங்களில் சமூகத்துடன் இணைந்து பணிபுரிவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

- ஸ்காபரோவில் கட்டப்படும் தமிழ் சமூக மையப் பணியை, உரிய காலத்தில் நிறைவு செய்து, அம்மையம் தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான ஆதரவையும் தொடர்ச்சியாக அளித்தல்.
- தடங்கலுக்குள்ளான ரொரண்டோ யாழ்ப்பாண கூட்டு ஒப்பந்தத்தை அமுல்படுத்தி, ரொரண்டோ யாழ்ப்பாணதிற்கிடையான உறவை வலுப்படுத்தல்.
- ஸ்காபரோ குடியிருப்பாளர்களுக்குத் தேவையான வளங்கள், சேவைகள், மற்றும் வாய்ப்புகளை இலகுவாகப் பெறும்படி செய்தல்.

**JUNE**
**26**









நீதன் சண்,
கல்விச் சபை
உபதலைவர்

ரொரண்டோவின் அடுத்த மேயராக ஒலிவியா செள அவர்களை அங்கீகரிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நான் ஒலிவியா அவர்களுடன் இரண்டு தசாப்தங்களாகப் பணி புரிந்துள்ளேன். ஒரு நீதியான, ஒன்றிணைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான அவரது ஆர்வத்தையும், அர்ப்பணிப்பையும் பாராட்டுகின்றேன்.

பாடசாலை அறங்காவலர், நகர கவுன்சிலர், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளில் அவர் பணிபுரிந்த காலத்தில், இளைஞர்கள், குழந்தைகள், மற்றும் அண்மையில் வந்த குடிவரவாளர், ஆகியோர்க்கான அவரது ஆதரவு, மிக வலுவுடையதாகவிருந்தது.

வீதிகளில் நின்று நீதி கேட்டு நாம் போராடிய சமயம், ஒலிவியா செள எம்முடன் ஒன்றாக நின்றவர். ஏனைய அரசியல் வாதிகள் தயக்கம் காட்டிய வேளை, ஒலிவியா எமக்காகப் பேசுவதற்கு அஞ்சவில்லை.

எங்கள் நகரத்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவரே மேயராகப் பணிபுரிந்து ரொரண்டோ நகர சபையில் எமது குரலாக ஒலிக்கத் தகுதி உடையவர் என்பது எனக்குத் தெரியும்.

# வெற்றிகரமான 17வது ஆண்டில் ஏழு வெ
# வரலாற்றில் இடம் பிடித்த உதயன் சர்வதே

கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தால் 2006ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பெற்று. தனது வெற்றிகரமான 17வது ஆண்டில் ஏழு வெற்றியாளர்களை கௌரவித்து வரலாற்றில் இடம் பிடித்த சிறப்பான விழா என்ற பெயரை தட்டிக் கொண்டது உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா.













# ற்றியாளர்களை கௌரவித்து
# ச விருதுகள் வழங்கும் விழா



கடந்த 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள மெற்றோபொலிட்டன் கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விருதுகள் வழங்கும் விழாவிற்கு தலைமை வகிக்க ஒலிபரப்பாளரும் சமூகசேவையாளருமான குயின்றஸ் துரைசிங்கம் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.



நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய கல்வி சார்ந்த செயற்பாட்டாளர் ருக்சன் பரா அவர்கள் தனது பங்களிப்பை சிறப்பாகச் செய்திருந்தார்.

மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் லோகன் கணபதி மற்றும் அரிஸ் பாபிகியன். பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட். ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் ஜமால் மையர்ஸ் மற்றும் மார்க்கம் நகரசபை உறுப்பினர் யுனைற்றா நாதன் பாராளுமன்ற உறுப்பினர் சுவான் சான் அவர்களது பிரதிநிதி ஆகியோர் அரச-ியல் தளத்தின் சார்பாக கலந்து சிறப்பித்தார்கள்.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவின் நிறுவனருமாகிய ஆர். என். லோகேந்திரலிங்கம் நிறுவனர் உரையாற்றினார்.


கவிஞர் புகாரி அவர்கள் தனது கவிதை வரிகளாலும் அதனை சமர்ப்பித்த முறையின-ாலும் சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றார்.



கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து விருதுகள் வழங்கும் பகுதி பரபரப்பாக ஆரம்பமாகியது.






இவ்வருடத்திற்குரிய உதயன் தலைமைத்துவ விருதினை சட்டத்தரணியும் சமூகசேவையாளருமான பாக்கியலக்சுமி வாசன் அவர்களும். கலை இலக்கிய மேன்மை விருதினை முன்னாள் கோப்பாய் கிறிஸ்த்தவக் கல்லூரி அதிபரும் எழுத்தாளருமான சின்னையா சிவனேசன் அவர்களும், உதயன˙ சமூக நல்லுறவு விருதினை ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றேமன்ட் சோ அவர்களும், வர்த்தக வெற்றியாளர் விருதினை ஸ்காபுறோ "பாபு புளோரிஸ்ட்" நிறுவன உரிமையாளர் பாபு என அழைக்கப்பெறும் மார்க்கண்டு விஜயகுமார் அவர்களும், "இளையோர் அடையாள விருது - ஒன்றாரியோ" என்னும் கௌரவத்தை ஆதவன் கனநாதன் அவர்களும், "இளையோர் அடையாள விருது - கியுபெக்" என்னும் இளையவர்களுக்கான கௌரவத்தை கௌரீஸ் சுப்பிரமணியம் அவர்களும், உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது - தமிழ்நாடு என்னும் விருதை பிரபல சர்வதேச ஊடகவிய- லாளர் சிவராமகிருஸ்ணன் பரமேஸ்வரன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்.



இந்த வெற்றியாளர்களை மேடைக்கு அழைத்து கௌரவிக்கும் வைபவத்திற்கு விருது விழா வெற்றிகரமாக நடைபெற ஆதரவு வழங்கிய வர்த்தகப் பெருமக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர் அழைக்கப்பெற்றனர். அவர்கள் அனைவரும் விருதுகளாக வெற்றியாளர்களுக்கு உரிய வாழ்த்துப் பத்திரங்களையும் வெற்றிக் கேடயத்தையும் தனித்தனியாக வழங்கிக் கௌரவித்தனர்.

300க்கும் அதிகமான அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் வர்த்தகப் பெருமக்கள் மற்றும் கலை இலக்கிய நண்பர்கள் என அனைத்து தரப்பினர் கலந்து கொண்ட ஒரு வெற்றி விழா என்ற பெயரை இவ்வருடத்தின் உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா தட்டிக்கொண்டனது என்றால் அது மிகையாகாது.

செய்தி: சத்தியன் -- படங்கள்: ரகு போட்டோ ரகுமாறன்














CANADA KANTHASWAMY TEMPLE
PRESENTS
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
இசையில்
Vijay TV Super Singer
Sudarshan
Vijay TV Bigg Boss
Amuthavanan
Comedy Artist
Vijay TV Super Singer
Keshav
TSN EXPRESS & TTR TRANSPORT
வழங்கும்
JUNE
24 - 25
2.00 PM To 11.00PM
கார்த்திகேயன்
விழா
KAARTHIKEYAN FEST
Sun TV Actress
Deepthi
Host
Title sponsors
Vijay TV Super Singer
Aparna
Vijay TV Super Singer
Sushmita
FM PARTNERS
east FM 102.7
இலங்கை - இந்திய - கனடிய கலைஞர்களுடன்
தென்னிந்திய திரை நட்சத்திரங்கள்....
சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்
மற்றும் களியாட்ட நிகழ்வுகள்
Zee Tamil
Maathulani
SV MEDIA
tamil one
தொடர்புகளுக்கு
விளம்பரம் மற்றும் வர்த்தகச்சாவடி
Muthu
+14162000792
Thana
+16478892710
FREE ENTRANCE AND PARKING
கனடா கந்தசுவாமி கோவில் வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்
Location : Canada Kanthaswamy Temple Society, 733 Birchmount Rd, scar, M1K1R5.
Event Sponsors
MEDIA SPONSORS

# அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் பிரதமர் மோடி சந்திப்பு : முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்து

வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப்பேசினார். அப்போது, அமெரிக்காவின் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் போர் விமான இன்ஜின்களை இந்தியாவில் தயாரிப்பது, அமெரிக்காவின் அதிநவீன ஆளில்லா விமானங்களை வாங்குவது உள்ளிட்ட முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அழைப்பை ஏற்று, பிரதமர் நரேந்திர மோடி கடந்த 20ம் தேதி டெல்லியில் இருந்து சிறப்பு விமானத்தில் அமெரிக்கா சென்றார்.

நியூயார்க்கில் உள்ள ஐ.நா. சபை வளாகத்தில் 21ம் தேதி நடந்த யோகா தின விழாவில் பங்கேற்றார். 2ம் நாளான நேற்று வெள்ளை மாளிகையில் அதிபர் ஜோ பைடனை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார்.19 குண்டுகள் முழங்க வரவேற்பு: அப்போது, பிரதமர் மோடிக்கு 19 குண்டுகள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு நாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன.மோடியை வரவேற்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பேசிய போது, ''இன்றைய சூழலில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பணியாற்றுவது காலத்தின் கட்டாயம். இரண்டும் வலிமையான நாடுகள், நெருங்கிய நட்பு நாடுகள்.

நாம் இணைந்து எடுக்கும் முடிவுகள் எதிர்காலத்தில் நல்ல பலன்களை தரும்'' என்றார்.பிரதமர் மோடி பேசும்போது, ''சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண இந்திய குடிமகனாக அமெரிக்காவுக்கு வந்துள்ளேன். பிரதமரான பிறகும் பலமுறை வந்துள்ளேன். ஆனால், இந்த முறை இந்திய வம்சாவளியினருக்காக வெள்ளை மாளிகை கதவுகள் விசாலமாக திறக்கப்பட்டுள்ளன. வெள்ளை மாளிகையில் எனக்கு அளிக்கப்பட்ட உற்சாக வரவேற்பு 140 கோடி இந்தியர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு'' என்றார்.தொடர்ந்து, இரு தலைவர்களும் தனியாக ஆலோசனை நடத்தினர்.



பிறகு, இரு நாடுகளின் மூத்த அதிகாரிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, அமெரிக்காவின் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் போர் விமான இன்ஜின்களை இந்தியாவில் தயாரிக்க ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமெரிக்காவின் அதிநவீன எம்கியூ9 பிரிடேட்டர் வகையை சேர்ந்த 31 ஆளில்லா விமானங்களை (ட்ரோன்) வாங்குவது தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்தானது. பின்னர், இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து, ஒப்பந்தங்கள் குறித்து விரிவாக விளக்கம் அளித்தனர்.போர் விமான இன்ஜின்: இந்தியாவில் தயாரிக்கப்படும் தேஜஸ் போர் விமானங்களுக்கு அமெரிக்காவின் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனம் இன்ஜின்களை வழங்கி வருகிறது. இந்த இன்ஜின்கள் இதுவரை அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு, அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் அதிக திறன் கொண்ட போர் விமான இன்ஜின்களை இந்தியாவிலேயே தயாரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.இதுகுறித்து ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்திய விமானப் படைக்காக தேஜஸ் போர் விமானங்களை இந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனம் (எச்ஏஎல்) தயாரித்து வருகிறது. இந்த போர் விமானங்களுக்கான எப்414 ரக இன்ஜின்களை இந்தியாவிலேயே தயாரிப்பது தொடர்பாக எச்ஏஎல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. கடந்த 40 ஆண்டுகளாக இந்தியாவுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். பெங்களூரு, புனேவில் உள்ள எச்ஏஎல் தொழிற்சாலைகளின் ஆராய்ச்சி திட்டங்களில் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனமும் இணைந்து இருக்கிறது. எச்ஏஎல் நிறுவனத்துக்கு எஃப் 404 ரகத்தை சேர்ந்த 75 இன்ஜின்களை ஏற்கெனவே வழங்கியுள்ளோம். அடுத்தகட்டமாக எஃப்414 ரகத்தை சேர்ந்த 99 இன்ஜின்கள் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதில் 8 இன்ஜின்களை ஏற்கெனவே வழங்கிவிட்டோம்.அடுத்த கட்டமாக எங்கள் நிறுவனம் சார்பில் எஃப்414 ஐஎன்எஸ்6 என்ற ரகத்தை சேர்ந்த அதிநவீன இன்ஜின்களை தயாரித்து சோதனை செய்து வருகிறோம். இந்த இன்ஜின் தயாரிப்பிலும் இந்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.இஸ்ரோ நாசா ஒப்பந்தம்: அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் நட்பு நாடுகளுடன் இணைந்து ஆர்டிமிஸ் என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதில் 10 ஐரோப்பிய நாடுகள், 7 ஆசிய நாடுகள், 3 வட அமெரிக்க நாடுகள், 2 ஆப்பிரிக்க நாடுகள், 2 தென்அமெரிக்க நாடுகள் உட்பட மொத்தம் 25 நாடுகள் நாசாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளன.இந்த வரிசையில், பிரதமர் மோடியின் அமெரிக்க பயணத்தின்போது, இந்தியாவின் இஸ்ரோ மற்றும் அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் இடையே ஆர்டிமிஸ் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி, நிலவுக்கு மனிதர்களை அனுப்புவது தொடர்பான ஆராய்ச்சியில் இஸ்ரோவும், நாசாவும் இணைந்து செயல்படும். ஆர்டிமிஸ் திட்டத்தின் அடுத்த கட்டமாக, செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பும் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படும் என்று நாசா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சந்தன பெட்டியை அதிபர் பைடனுக்கு பரிசளித்த பிரதமர் மோடி



வெள்ளை மாளிகையில் புதன்கிழமை நடைபெற்ற பிரதமர் மோடிஅதிபர் பைடன் சந்திப்பின்போது இரு வரும் பல்வேறு பரிசுப் பொருட்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர்.அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த காஷ்மீர் பெட்டகத்தில் வைத்து 7.5 காரட் வைரத்தை அமெரிக்காவின் முதல் பெண்மணியான ஜில் பைடனுக்கு பிரதமர் மோடி பரிசளித்ததாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

காற்றாலை, சூரிய ஒளி போன்ற இயற்கை வளங்களை பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் இந்த வைரம் உருவாக்கப்பட்டுள்ளது.இது ஒரு காரட்டுக்கு 0.028 கிராம் கார்பனை மட்டுமே வெளியிடக்கூடியது. மேலும் இந்த வைரத்துக்கு ஜெமோலஜிக்கல் லேப், சர்வதேச ரத்தினவியல் நிறுவனம் (ஐஜிஐ) ஆகியவை சான்றளித்துள்ளன. தமிழகத்தின் வெள்ளை எள்: கர்நாடகா மைசூருவின் நறுமண சந்தன மரத்தில் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் கைவினை கலைஞர் உருவாக்கிய சந்தனப் பெட்டியை பிரதமர் மோடி அதிபர் பைடனுக்கு பரிசளித்தார். அதில், விநாயகர் உருவம் பொறித்த சிலை, விளக்கு, தாமிர தட்டுடன் 10 சிறிய வெள்ளி குடுவைகளும் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக, தமிழகத்தின் வெள்ளை எள் பைடன் பரிசில் முக்கிய இடம்பிடித்தது.இவைதவிர, சிறிய வெள்ளி குடுவைகளில் ராஜஸ்தான் கைவினை கலைஞர் உருவாக்கிய 24 காரட் ஹால் மார்க் தங்க காசு, பஞ்சாபின் நெய், ஜார்கண்டின் கையால் நெய்யப்பட்ட பட்டுத் துணி, உத்தராகண்டின் நீளமான பாசுமதி அரிசி, மகாராஷ்டிரா வெல்லம், ராஜஸ்தான் கைவினைஞர் களால் செய்யப்பட்ட 99.5 சதவீதம் தூய்மையான ஹால்மார்க் வெள்ளி நாணயம், குஜராத்தின் உப்பு ஆகியவை சந்தன பரிசு பெட்டகத்தில் இடம்பெற்றிருந்தன.

"தி டென் பிரின்சிபல் உபநிடதங்கள்'' புத்தகமும் பைடனுக்கு பரிசாக அளிக்கப்பட்டது. அதேபோன்று, அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் பிரதமர் மோடிக்கு, 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கையால் செய்யப்பட்ட பழமையான அமெரிக்க புத்தக பிரதி, கேமரா, முகநூல் அச்சு, அமெரிக்க வன விலங்கு புகைப்படம் எடுத்தல் பற்றிய ஹாட்கவர் புத்தகம், ராபர்ட் ப்ரோஸ்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் கையொப்பமிட்ட முதல் பதிப்பு நகலையும் பரிசளித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் விளைவிக்கப்படும் பாசுமரி அரிசி உலகளவில் பிரசித்தி பெற்றது. நீளமான வடிவம், தனித்துவமான வாசனை காரணமாக அந்த அரிசிக்கு வரவேற்பு அதிகமாக உள்ளது.

உள்ளூர் விவசாயிகளால் இயற்கை முறையில் இந்த அரிசி விளைவிக்கப்படுகிறது.இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த பாசுமதி அரிசியை அமெரிக்க அதிபர் பைடனுக்கு பிரதமர் நரேந்திர மோடி பரிசளித்தார். இதற்காக, உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித் துள்ளார்.

# இலாகா இல்லாத அமைச்சராக செந்தில்பாலாஜி நீடிக்க தடை கோரி உயர் நீதிமன்றத்தில் அதிமுக முன்னாள் எம்.பி மனு



இலாகா இல்லாத அமைச்சராக செந்தில்பாலாஜி நீடிப்பதற்கு தடை விதிக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக முன்னாள் எம்.பி ஜெயவர்த்தன் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். சென்னை உயர் நீதிமன்றத்தில், அதிமுக முன்னாள் எம்.பி ஜெயவர்த்தன் தாக்கல் செய்துள்ள மனுவில், அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில்பாலாஜி வசம் இருந்த துறைகளை இரு அமைச்சர்களுக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டது.மேலும், செந்திலபாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக நீடிப்பார் எனவும் அறிவித்தது.

செந்தில்பாலாஜி எந்த தகுதியின் அடிப்படையில் அமைச்சர் பதவியில் நீடிக்கிறார் என்பது குறித்து அரசு விளக்கமளிக்க வேண்டும். அமலாக்கத் துறை வழக்கை எதிர்கொண்டுள்ள செந்தில்பாலாஜி, அமைச்சராக நீடிப்பதை விரும்பவில்லை என ஆளுநர் தெரிவித்துள்ள சூழலில், அவர் பதவியில் நீடிப்பது அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது.

அரசியலமைப்புச் சட்டம் 164 (1)வது பிரிவின்படி, அமைச்சர்களை நியமிக்கவும், நீக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது. இந்த நிலையில், செந்தில்பாலாஜி அமைச்சராக நீடிப்பது சட்டவிரோதமானது. அவர் எடுத்துகொண்ட ரகசிய காப்பு பிரமாணத்தை மீறிய செயல்.நீதிமன்ற காவலில் உள்ளவரை அமைச்சராக நீடிக்க அனுமதிப்பது அரசியல் சாசன அமைப்புகள் மீதான மக்களின் நம்பிக்கையை வீழ்த்தி விடும். எனவே, செந்தில்பாலாஜி அமைச்சராக நீடிக்க தடை விதிக்க வேண்டும். அவருக்கு அமைச்சர்களுக்கு வழங்கப்படும் எந்த சலுகைகளையும் வழங்கக்கூடாது'' என்று மனுவில் கோரியுள்ளார்.இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## (கனடா உதயனின் பிரத்தியேகத் தொடர் - பகுதி 19)

## நீர் நிர்வாகம்: இலங்கைக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணி

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**



ஐயா கோப்பி குடிக்கிறியளே? சார் காப்பி சாப்பிடுறீங்களா? இந்த இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

இதென்ன கோதாரி ரண்டும் ஒண்டு தானே? நாங்கள் இப்படிச் சொல்லுவம் இந்தியாவில அவை அப்பிடிச் சொல்லுவினம் என்று உங்கள் பதில் வருமென்று தெரியும். இந்திய நேயர்களிடமிருந்து நாங்க இப்பிடித்தான்சொல்லுவோம் சிலோன் காரர் அப்படித்தான் சொல்லுவாங்க என்று பதில் வரும். திண்ம உணவுகளை உட்கொள்வதையே பொதுவாக சாப்பிடுதல் என்ற சொல் குறிக்கும். திரவ வடிவில் உள்ளவற்றை உட்கொள்வதை குடிப்பது என்று தான் பொதுவில் சொல்லுவோம்.

இலக்கியத்தமிழில் வேண்டுமானால் தண்ணீர் அருந்துதல் உணவு அருந்துதல் என்று இரண்டிற்கும் பொதுவில் சொல்லலாம். ஆனால் அதே நேரத்தில் தண்ணி அடித்தேன் தண்ணி போட்டேன் என்றால் அந்தத்தண்ணீரின் அர்த்தமே மாறிவிடும். அந்த அர்த்தத்திற்கு விளக்கம் தேவையில்லை என்று நினைக்கிறேன். அடித்தும் இருப்பீர்கள் அடித்ததைப் பார்த்தும் இருப்பீர்கள்.

ஒரு மனிதன் சராசரியாக ஒரு நாளுக்கு நாலைந்து கிளாஸ் தண்ணீராவது குடிக்க வேண்டும் என்கிறார்கள் ஏனென்றால் மனித உடலின் சராசரி 60 தொடக்கம் 70 சதவீதம் தண்ணீராலானது. உடலில் ஏற்படும் அதிக நீரிழப்பு மனித உடலில் உள்ள முக்கிய அவயவங்களை இயங்கவிடாமல் செய்து மரணத்தையும் ஏற்படுத்திவிடும். வெய்யில் காலங்களில் போதியளவு நீராகாரங்களை எடுத்துக் கொள்ளுமாறு கூறுவது அதனால் தான்.

சரி நாம் தண்ணீர் குடிக்கிறோம் ஏனைய நீராகாரங்களையும் எடுத்துக் கொள்கிறோம். அவையெல்லாம் நாம் குடிக்கின்ற தண்ணீர். ஆனால் அதற்கு மேலதிகமாக நாம் சாப்பிடுகிற அல்லது உண்ணுகிற தண்ணீர் என்ற ஒன்று இருக்கிறது என்றால் நம்புவீர்களா? இதனை ஆங்கிலத்தில் (வாந றயவநச றந நயவ) என்கிறார்கள். நீங்களும் நானும் இந்த சமூகத்தின் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் சராசரியான 3496 லீற்றர் தண்ணீரைச் சாப்பிடுகிறோம் என்று நான் சொன்னால் மறை கழன்டிட்டுது என்பீர்களா?

உண்மையில் இது ஒரு கணிப்பிடப்பட்ட ஒரு பெறுமதிதான். இதனை காப்பி சாப்பிடுதல் போன்ற அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு மனிதன் நாளாந்தம் சராசரியாக நுகர்கின்ற நீரின் அளவு 3800 லீற்றர்கள் என்று கணிப்பிட்டிருக்கிறார்கள். இதை மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள் இதில் முதலாவது வகை 137 லீற்றர்கள் குளித்தல், துணிதுவைத்தல், கழிவறை பாவித்தல், சுத்திகரித்தல், உணவு சமைத்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்துவதுடன் நாம் குடிக்கும் நீரும் இதில் உள்ளடங்கும். இரண்டாவது வகை 167 லீற்றர்கள் நாம் பயன்படுத்தும் உடைகள் காகிதம் பருத்தி மற்றும் ஏனைய கைத்தொழில் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்திய நீரின் அளவாகும். இந்த நீர் நமது கண்ணுக்குத் தெரியாமல் அப்பொருள்களில் அருவமாய் (invisible) ஒளிந்துள்ளது. மூன்றாவது பகுதிதான் உண்மையில் நாம் சாப்பிடுகின்ற நீர். 3496 லீற்றர் நீர் அதாவது நமது நாளாந்த தண்ணீர் நுகர்வின் 92 சதவீதம் நாம் உண்ணும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஒளிந்திருக்கிறது. சரி நமது கோப்பி உதாரணத்திற்கே வருவோம். ஒரு கப் கோப்பி போடஎவ்வளவு தண்ணீர் வேண்டும்? கேத்திலிலை தண்ணிகொதிச்சவுடன் ஊத்திக்கலக்க ஒரு 200 தொடக்கம் 300 மில்லிதான் தேவைப்படும் இல்லையா? ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பீடு ஒன்றின்படி ஒரு கோப்பை கோப்பி தயாரிக்க 140 லீற்றர் தண்ணீர் தேவைப்படுகிறது என்றால் தலை சுற்றுகிறமாதிரி இல்லையா?

ஒரு கிலோகிராம் கோப்பியை உற்பத்தி செய்ய 18900 லீற்றர் தண்ணீர் தேவைப்படுவதாக மற்றொருகணிப்பீடு சொல்கிறது. இதென்ன பிரமாதம் இன்னொரு ஸ்பெஷல் ஐட்டமும் இருக்கு. ஒரு கிலோ எலும்பில்லாத மாட்டிறைச்சி உற்பத்தி செய்ய 15400 லீற்றர் தண்ணீர் தேவைப்படுகிறதாம். ஒரு லீற்றர் பிளாஸ்டிக் போத்தல்களில் இந்த 15400 லீற்றறையும் ஊற்றி ஒன்றின் மீது ஒன்று அடுக்கினால் 8 மீற்றர் நீளமானதும் 40 மீற்றர் உயரமானதுமான ஒரு தண்ணீர் சுவரை எழுப்பி விடலாம் என்கிறார்கள். இவ்வளவு பெரிய தண்ணீர் சுவர் ஒரு கிலோ மாட்டிறைச்சியில் அருவமாய் ஒளிந்துள்ளது. ஏனைய இறைச்சி வகைகளை உற்பத்தி செய்ய அதைவிடக் குறைந்த நீரே செலவாக-றது என்கிறார்கள். உதாரணமாக ஒரு கிலோ கோழி இறைச்சி உற்பத்திக்கு 4300 லீற்றரும் ஒரு கிலோ ஆட்டிறைச்சிக்கு 5500 லீற்றரும் தேவைப்படுகிறதாம். மறுபுறம் ஒரு கிலோ அர-சி உற்பத்திக்கு 2500 லீற்றரும் சீனி உற்பத்திக்கு 1780 லீற்றரும் செலவாகிறதாம். ஆனால், ஒரு கிலோ ஆப்பிள் உற்பத்திக்கு 822 லீற்றர் மட்டுமே செலவாவதாகக் கணிப்பிட்டிருக்கிறார்கள். இதெல்லாம் மேற்குலக நாடுகளில் தொழில் ரீதியாக வளர்க்கப்படும் மிருகங்கள் பறவைகள் மற்றும் தாவரங்களின் தண்ணீர் உள்ளடக்கம். எங்களுடைய வீடுகளிலே விட்டுவளர்க்கப்படும் கோழி வாத்து போன்ற பறவைகள் ஆடு மாடு போன்ற மிருகங்களின் தண்ணீர் பாவனை நிச்சயமாகக் குறைவுதான். அவற்றை அடித்துச் சுவைக்கும் போது நீங்கள் சாப்பிடும் தண்ணீர் குறைவாகத் தானிருக்கும்.



மேலே நாம் கண்ட உதாரணங்களிலே ஒரு கிலோகிராம் உற்பத்தி செய்ய தண்ணீரைப் பயன்படுத்தும் உற்பத்திப் பொருளாக கோப்பி அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது தான் ஆச்சரியம். ஒரு கிலோ கோப்பியில் ஒரு கிலோ மாட்டிறைச்சியை விட அதிகளவு தண்ணீர் மறைந்திருப்பதாக (thewaterweeat.com) வெப்தளம் சொல்லுகிறது. கோப்பிய தோட்டங்களில் உற்பத்தி செய்வது முதல் நமது சாப்பாட்டு மேசைக்கு கொண்டு வருவதற்கான செயன்முறையில் அதிகளவு தண்ணீர் பயன்படுத்தப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். ஆக நாம் உண்ணும் உணவில் மறைந்துள்ள தண்ணீரே நேரடியாக நாம் காணும் தண்ணீர் பயன்பாட்டை விட மிக மிக அதிகம் என்கிறார்கள்.

கோப்பி போன்ற ஓரிரு உணவுகளைத் தவிர சைவ உணவுவகைகளில் மறைந்துள்ள நீரின் அளவைவிட அசைவ உணவு வகைகளில் மறைந்துள்ள நீரின் அளவு மிகவும் அதிகம். அதிலும் குறிப்பாக கைத்தொழில் ரீதியில் பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குணவுகளில் மறைந்துள்ள நீரின் அளவு சாதாரணமாக வீடுகளிலும் காடுகளிலும் வளர்க்கப்படும் விலங்குகளில் மறைந்துள்ள நீரின் அளவை விட மிக அதிகம் என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் மக்கள் சுத்தமான குடிநீருக்காக நீண்டதூரம் சென்று அதைப் பெறவேண்டிய நிலை ஒரு புறம் காணப்படும் அதேவேளை மறைமுகமான நீர்ப்பயன்பாடும் தொழில்சாலைகள் மற்றும் பண்ணைகள் ஊடாக அதிகரித்திருப்பதை காண முடிகிறது. காபனீரொட்சைட்டு ஊட்டப்பட்ட மென்பானங்களை உற்பத்தி செய்யும் பிரசித்தி பெற்ற கம்பனிகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தமது உற்பத்தியை விரிவாக்கம் செய்வதற்கு பிரதான காரணி தங்கள் நாட்டின் நீர்வளத்தைப் பாதுகாத்துக் கொள்வதாகும்.

இது நமக்கு நேடியாக நீர்பயன்படுத்தப்படுவதைக் காட்டுகிறது. ஆனால் வெளிநாட்டு முதலீடுகள் ஊடாக விவசாயம் கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் அரிவிருத்தி அடைந்த நாடுகளின் நீர்வளத்தை சுரண்டும் முக்கிய வழியாகக் காணப்படுகிறது. உதாரணமாக வங்காளதேசத்திலிருந்து ஒருகிலோ மாட்டிறைச்சியை அமெரிக்கா இறக்குமதி செய்யுமாயின் 15400 லீற்றர் தண்ணீரைச் சேமிப்பதாக அமையும்.

ஆகவே ஒரு நாடு அதிகமாக தண்ணீரைப் பயன்படுத்தும் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் தமது உள்நாட்டு நீர்வளத்தைப் பாதுகாக்க முடியும். அதென்ன பெரிய விடயமா எவ்வளவு நீர் நிலைகளிலிருந்து ஆவியாகிறது. ஏவ்வளவு நீர் ஆறுகளில் சென்று கடலோடு கலக்கிறது. அதனுடன் ஒப்பிடுகையில் நாம் உண்ணும் நீர் என்ன பெரிதா என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. உலகின் பெரும்பகுதி நீரினால் தான் மூடப்பட்டள்ளது. ஆனால் மனித தேவைகளுக்காகப் பயன்படுத்தத்தக்க நிலையில் உள்ள நீரினளவு மிகக்குறைவாக உள்ளதென்று நீரியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அத்துடன் மனித பொருளாதார செயற்பாடுகள் காரணமாக புவி வெப்பமடைவதனால் ஏற்படக்கூடிய வரட்சி நிலைமைகள் காரணமாக மக்கள் நீருக்காக போராட வேண்டிவருமெனவும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

ஆகவேதான் ஒவ்வொரு நாடும் தனது நீரவளத்தை முகாமை செய்வது மிகமுக்கியம் எனக்கருதப்படுகிறது. சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீடுகள் ஒரு வறிய நாட்டிற்கு வரப்பிரசாதமாகவும் அபிவிருத்திக்கான ஒரு வழியாகவும் புகழப்பட்ட போதிலும் நாடுகளின் நீர்வளத்தை சுரண்டும் ஒரு மாற்றுக்கருவியாக அதனைப்பயன்படுத்த முடியும். இப்போது நீங்கள் உணவு வகைகளையும் கையில் எடுத்து வாயில் வைக்கும் போதெல்லாம் அதில் மறைவாக உள்ளடங்கியுள்ள உண்ணும் நீரின் அளவு உங்கள் நினைவுக்கு வந்து உங்களுக்கு தொல்லை கொடுக்கும். காலையில் ஒரு கோப்பை கோப்பியை கையில் எடுக்கும் போதே அந்தத் தொல்லை ஆரம்பிக்கும். கவலை வேண்டாம். இப்படியான நீர்பயன்பாட்டை நாம் முழுமையாகத் தவிர்ததுவிட இயலாது ஆனால் குறைக்க முடியும். அதனையே நாம் செய்ய வேண்டும். இயற்கையான முறைகளில் வளரும் உணவுவகைகளை பயன்படுத்த முடிந்தால் தண்ணீர்ப்பயன்பாட்டைக் குறைக்க இயலும்.

இது பெரும்பாலும் கிராமங்களிலேயே சாத்தியப்படும் கனடா போன்ற மீளுயர நகராக்கம் கொண்ட நாடுகளில் இது சாத்தியப்படாது. ஆகவே நடைமுறை ரீதியில் சைவ உணவுகளை அதிகமாகவும் அசைவ உணவுகளை குறைவாகவும் எடுத்துக் கொள்வது இதற்கான ஒரு மாற்று வழியாகக் கூறுகிறார்கள். ஆடைவகைகள் என்று வரும்போது டெனிம் போன்ற ஆடைகளை உற்பத்தி செய்ய அதிகளவு நீர் செலவாகிறது. எனவே ஆடைத தெரிவுகளை மேற்கொள்ளும் போதும் இதுபற்றி கரிசனை கொள்ளலாம். இவை எதுவுமே உங்களால் முடியாவிட்டால் கூட பரவாயில்லை. கழிவறையில் குளியலறையில் காரியாலயத்தில் விரயமாகும் நீரை குறைக்க தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்யலாம். உங்களில் பலருக்கு நீச்சல் தடாகங்களைக் கொண்ட வீடுகள் சொந்தமாக இருக்கலாம். அவற்றுக்காக விரயமாகும் நீரின் அளவு பற்றிச் சிந்தியுங்கள். சிக்கனமாக அவற்றைப்பயன்படுத்தும் விதம் குறித்துக்கரிசனைப்படுங்கள்.

நீங்கள் பணம் கொடுத்துத்தான் நீரைப் பெறுகிறீர்கள் அதற்கப்பால் அது ஒரு பொது வளமாகவும் பொதுச்சொத்தாகவும் இருக்கிறது என்பதையும் மறக்காதீர்கள். வங்குரோத்தடைந்த இலங்கையில் அரைலீற்றர் போத்திலில் இடைக்கப்பட்ட குடிநீர் 90 ரூபாவுக்கு விற்கப்படுவது விந்தையாக உள்ளது. நீர்வழங்கல் சபையினால் வழங்கப்படும் நீருக்கான கட்டணங்களும் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் பசிக்கு நீரைக்குடிப்பது கூடஅதிக செலவு கூடியதாக அமையப் போகிறது. உங்கள் நாட்டில் எப்படி?



# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

The question whether under English law a Civil Servant has the right to sue for earned wages, whether by way of a petition of right or otherwise, has been referred to by Judges and text writers as one of much doubt and difficulty. But the case of High Commissioner for India v. Lall is at the least a definite pronouncement on the law on this question as applicable in British India. In that case Mr. Lall, who had been a member of the Indian Civil Service, was dismissed from service by the appropriate authority, and he claimed in the action a declaration that his removal was ultra vires, that he was still a member of the Indian Civil Service, and that as such he was entitled to all rights secured to him by the covenant rules and regulations issued from time to time by the appropriate authorities. After considering the provisions of s. 240 of the Government of India Act 1935, their Lordships held that there had been a breach of a provision of s. 240 which required that a civil servant shall not be dismissed unless he has been given a reasonable opportunity of showing cause against the action proposed to be taken in regard to him and that the purported removal from office of Mr. Lall was void and inoperative. They accordingly granted a declaration to that effect and to the effect that Mr. Lall remained a member of the Indian Civil Service at the date of the institution of his action.

Their Lordships thereafter considered a submission for Mr. Lall that he was entitled to recover in the action his arrears of pay from the date of the purported order of dismissal up to the date of his action. They said that "it is unnecessary to cite authority to establish that no action in tort can lie against the Crown and therefore any right of action must either be based on contract or conferred by Statute Reliance was then placed on a judgment of Lord Blackburn in the Scottish case of Mvlvenv. The Admiralty in which the matter had been discussed as follows: —

"These authorities deal only with the power of the Crown to dismiss a public servant, but they appear to me to establish conclusively certain important points. The first is that the terms of service of a public servant are subject to certain qualifications dictated by public policy, no matter to what service the servant may belong, whether it be naval, military or civil, and no matter what position he holds in the service, whether exalted or humble. It is enough that the servant is a public servant, and that public policy, no matter on what ground it is based, demands the qualification. The next is that these qualifications are to be implied in the engagement of a public servant, no matter whether they have been referred to in the engagement or not.

If these conclusions are justified by the authorities to which I have referred, then it would seem to follow that the rule based on public policy which has been enforced against military servants of the Crown, and which prevents such servants suing the Crown for their pay on the assumption that their only claim is on the bounty of the Crown and not for a contractual debt, must equally apply to every public servant. (see (1920) 3 K. B. 663, 25 R. 112 and other cases there referred to).

It also follows that this qualification must be read, as an implied condition, into every contract between the Crown and a public servant, with the effect that, in terms of their contract, they have no right to their remuneration which can be enforced in a Civil Court of Justice, and that their only remedy under their contract lies in an appeal of an official or political kind."

Mulvane's case itself concerned the question whether the salary of a civil employee of the Admiralty could be arrested in the hands of the Commissioners of the Admiralty at the instance of a person holding a decree against the employee for the payment of a sum of money. Although the Court, including Lord Blackburn, did refer to earlier decisions in which there had arisen the particular question whether the salary of a civil servant is attachable, it seems clear that Lord Blackburn's own conclusion was based firmly on the primary proposition that a civil servant has no right to remuneration which can be enforced in a civil Court.

After the passage I have already cited, there occur in the judgment the following observations: — "It further appears to me that, if this conception of the effect of public policy on the contract itself had been developed earlier, it would have led to the same conclusions in the numerous cases to which the Lord Ordinary has referred as were reached on different {1926) S. C. S42.) and, in some cases, on somewhat unsatisfying grounds. It would also have avoided the necessity for several statutory provisions applicable to the pay of particular services which must now be regarded as merely declaratory of the common law."

Their Lordships in Lodi's Case referred to the provisions applicable to public servants in India prior to the Government of India Act 1935 and to the relevant provisions of the Government of India Act 1919. Section 96B of that Act had declared that a civil servant holds office during His Majesty's pleasure, .............but no person in that service may be dismissed by any authority subordinate to that by which he was appointed". Under sub-section (2) of s. 96B the Secretary of State for India in Council had been empowered to make rules for regulating inter alia the conditions of service, pay and allowances, and discipline and conduct, of the Civil Services of India. One such rule had provided certain conditions precedent to the dismissal of a civil servant such as: that he must be afforded an adequate opportunity of defending himself, that charges should be framed and communicated to the person charged, that a written defence must be entertained if made, and that an enquiry must be held if the person charged so desires. These provisions were the subject of consideration in the Privy Council in 1938. In the case of Rangachari1 their Lordships held that the provision in (-s. 9 6B (1)) itself which prohibited the dismissal of an officer by any authority subordinate in rank to the authority that appointed him was peremptory, and that a dismissal purporting to be made in violation of that provision was void and inoperative. But in Venkata Rao's case 2 decided on the same day, their Lordships rejected the contention that a dismissal in breach of the rules made under s. 9 6B could give rise to a right of action by the dismissed officer. Reference was made to an observation in Gould's case 3: —

"The argument for a limited and special kind of employment during pleasure, but with the added contractual terms that the rules are to be observed is too artificial and far-reaching. " Their Lordships regarded " the terms of the section (96B (2)) as containing a statutory and solemn assurance that the tenure of office though at pleasure will not be subject to capricious or arbitrary action but will be regulated by rule.............Their Lordships are unable as a matter of law to hold that redress is obtainable from the Courts by action. To give redress is the responsibility of the Executive Government."

Accepting these propositions, the Privy Council decided in Lall's case that a public officer had no right to claim arrears of pay under his covenant, or in other words that he had no contractual right enforceable by action. (1 {1037) A. I. R. (P.C.) 27. * Idem p. 31. USytj) A. C. 575.)

I must note at this stage that at least until the coming into effect of the Ceylon State Council Order in Council, 1931, and perhaps even until the coming into operation of the Ceylon Constitution Order in Council 1946, the position of public servants in Ceylon was regulated in a manner similar to that which had obtained in India under the Government of India Act, 1919. Their Lordships in Venkata R a o 's case referred to the fact that s. 96B, in sub-section (5), reaffirmed the supreme authority of the Secretary of State over the Civil Service, and relied on this fact for the opinion that rules made under that section did not confer rights enforceable by action in the Courts. A similar supreme authority was formerly vested in the Secretary of State for the Colonies over the public services of Ceylon. For much the greater period of British rule in Ceylon, the right to dismiss at pleasure was implied and recognized in the case of the public service of Ceylon, and the pay and conditions of service were regulated by, or under delegated authority from, the Secretary of State. Such rules and regulations, as also the Pension Minute applicable to the public service, were not statutory enactments, nor (unlike the Indian Rules after 1919) were they even made under empowering statutory provisions.

It is clear to me for these reasons that prior to the operation of the Ceylon Constitution Order in Council, 1946, the nature of the rights of a public servant in Ceylon was similar to that of a public servant o" India, and that upon the reasoning in the Indian decisions cited above, a public servant in Ceylon had no right of redress by action in the Courts for a breach of rules and regulations prescribing the salaries and conditions of service of public officers. It would seem to follow therefore that the grounds of the decision in L a all's case in particular, holding that a public servant had no right to sue for his wages, were applicable also in the case of members of the public services of Ceylon.

Counsel for the plaintiff in the present appeal referred to several decisions of English and Australian Courts in support of his argument that the Scottish case of Mulvenna was wrongly decided, and that accordingly the decision of the Privy Council in Lall's case should not be followed. Certain of the English and Australian decisions, it was urged, did acknowledge the right of a public servant to sue for his earned wages. I must refer even briefly to some of these decisions. (To be continued)

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# இலங்கை கடல் பிரதேசம் மேலும் சீன மயமாகுமா?

## உதயனின் சிறப்பு கட்டுரை - எமது செய்தியாளர்



இலங்கை கடலை குறிவைக்கும் சீனாவிற்கு அவல் கிடைத்தமை போன்று சீனாவிற்கு சாதகமான ஒருவர் நாராவின் (NARA) பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய நீர்வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையின் பணிப்பாளர் சபைக்கு கிழக்கு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையின் பேராசிரியர் வினோபாவா கடற்றொழில் அமைச்சரால் 2023-06-12 அன்று நியமிக்கப்பட்டார்.

இலங்கையின் கடல் பிராந்தியத்தில் என்ன முயற்சியிலாவது எந்த தொழிலிற்கேனும் இறங்கிவிட வேண்டும் என சீனா முழு வீச்சில் இருப்பது ஒன்றும் இரகசியமல்ல. அந்த வகையில் கிழக்கு பல்கலைக்கழகத்தில்-இந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற சீனாவுடனான ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றிற்கான ஏற்பாட்டு நிகழ்விலும் இதே பேராசிரியர் முழுவீச்சில் செயல்பட்டிருந்தார் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் கூறுகின்றன.. கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத் சீனாவின் பக்கம் நின்றபோது கிழக்கு மாகாணத்தின் நிர்வாகங்களையும் சீனாவின் பக்கம் இழுத்துச் செல்கிறார் என்ற குற்றச்சாட்டு நிலவிய போதே இந்தச் சம்பவமும் இடம்பெற்றது.

இந்த நிலையில் இலங்கையின் கடல்சார் திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகள் ஏதும் கிடைக்கும் சமயத்தில் அதனை நாராவிடம் சமர்ப்பித்து ஆய்விற்கு உட்படுத்தி அதன் பரிந்துரையின் அடிப்படையில் முடிவுகள் எட்டுவதே வழமையான நிலை. அப்படியான நிலையில் சீனா சார்பில் ஏதும் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அது நாரா எனப்படும் தேசிய நீர் வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையின் ஆய்விற்கு அனுப்பி அதன் சான்றிதழைப் பெற்று இணைக்கப்பட்டாலும் உள்ளூர் அதிகாரிகள் அல்லது மீனவ அமைப்புக்கள் அதனை ஏற்றுக்கொண்டாலும் இந்தியா அதனை ஏற்குமா என்ற தீவிர சந்தேகம் தொடர்ச்சியாக உள்ளது. மேலும், வடகிழக்கு தமிழ் மக்களிடம் மட்டுமன்றி இதர தரப்பினரிடமும் இந்த ஐயம் இருக்கிறது. அதேவேளை, இவ்வாறான திட்டங்களிற்கு சாதகமான சான்றிதழைப் பெறுவதற்காகவே சாதகமான ஒருவர் அமர்த்தப்பட்டார் என்ற நியாயமான சந்தேகத்தை எழுந்தாலும், அதை உறுதி செய்யும் வகையிலே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை இந்தியாவின் அழுத்தங்களை மிஞ்சிய அழுத்தமாகவே இருக்கும் என்று அரசியல் அவதானிகள் மற்றும் அறிவியல் சமூகத்தினரின் இன்னுமோர் பார்வையாகவுள்ளது.

இதனிடையே தற்போது தேசிய நீர் வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் வினோபா தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பதவிக்கும் விண்ணப்பித்துள்ள நால்வரில் ஒருவராகவும் உள்ளார். ஆகவே இதே தரக்கம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் தெரிவிலும் ஆதிக்கம் செலுத்துமா எனவும் பலரால் தற்போதே ஐயம் கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்திற்குள்ளும் அதன் செயல்பாடுகள் மற்றும் நிதிஈட்டல்களிற்குள் எந்த வகையிலேனும் உள் நுழைய கடந்த இரு ஆண்டுகளாக சீனா படாதபாடுபடுகின்றது என்பதும் உலகறிந்த உண்மை. இதன் ஒரு வெளிப்பாடாக ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளத் தயாரானபோது மாணவர்கள் பகிரங்கமாகவே எதிர்ப்பு வெளியிட்டமையினால் துணைவேந்தர் மாணவர்களின் கூற்றுக்கு அமைய அதில் இருந்து பின் வாங்கியதனால் தற்போதைய துணை வேந்தர் இந்தியா சார்பான நிலைப்பாட்டை எடுக்கிறாரா என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கான துணை வேந்தர் தெரிவு என்பது யாழ்ப்பாணம் இந்தியாவின் ஆதிக்கத்தில் உள்ளதா அல்லது சீனாவான் முற்றுகையிடப்படுகிறதா என்ற போட்டி நிலைகூட எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று பல்கலைக்கழத்தில் உள்ளவர்களே கூறும் நிலை நிலவுகிறது.



இதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக வடக்கிலே இன்றுவரை ஓர் கடல் அட்டைப் பண்ணைகூட இல்லாத மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம். அங்கும், அதாவது முல்லைத்தீவிலும் கடல் அட்டைப் பண்ணைகளை மேற்கொள்ள முடியுமா எனவும் மாவட்டத்தில் கடலட்டை வளர்ப்புக்கு ஏதுவான கடற் சூழல் இருக்கின்றதா என்பதை ஆராய்வதற்காக நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஆய்வு அதிகாரிகளுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இம்மாதம் 13ஆம் திகதி கலத்துரையாடினார். இனி அங்கும் ஏதுவான கடல் சூழல் உண்டு என்றே அறிக்கை கிட்டும் என தற்போதே பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் 268 கடல் அட்டைப் பண்ணைகளும், கிளிநொச்சியில் 277 பண்ணைகளும், மன்னாரில் 123 பண்ணைகளும் உள்ள நிலையில் இனி முல்லைத்தீவும் கண் வைக்கப்பட்டு விட்டது. அதனால் சீனாபாடு கொண்டாட்டம்தான். இந்த கடலட்டை பண்ணைகள் மூலம் சீர் செய்ய முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும் என்பது அறிவியல் ரீதியாக கண்டறியப்பட்ட ஒன்று. அதுமட்டுமின்றி, வடக்கே ஏற்கனவே கடல் அட்டைப் பண்ணைகள் பெரும் பிரச்சனையாக உருவாகியுள்ளது.

சீனாவின் உதவியுடன் நிறுவப்படும் இந்த கடல் அட்டைப் பண்ணைகளில் வளர்க்கப்படும் கடலட்டைகள் முழுமையாக ஏற்றுமதி நோக்கத்தையே மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. சர்வதேச சந்தையில் நல்ல விலையைப் பெற்றுக்கொடுக்க கூடியவை இந்த கடலட்டைகள். ஆனால் அதன் மூலம் பெறப்படும் இலாபங்கள் சீன முதலாளிமார் அல்லது அதை நடத்தும் சீன நிறுவனத்திற்கே செல்கிறதே தவிர, அதன் மூலம் உள்ளூர் மீனவர்கள் யாரும் பலனடையவைவல்லை என்பதே யதார்த்தம். இதில் ஈடுபடும் உள்ளூர் மீனவர்களுக்கு கூலி மட்டுமே கொடுக்கப்படுகிறது, அதுவும் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை.







இந்த நிலையில் நிர்வாக மட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் சீனாவின் கடைக்கண் பார்வையில் இருந்தபோதும் தப்பி பிழைத்து வருகின்றபோதும் அமைச்சர் பக்கத்து அழுத்தங்களிற்கு குறைவு இன்றியே காணப்படுகின்றது. இதிலே எதிர்வரும் 21ஆம் திகதி சீனாவில் இடம்பெறும் யோகா தினத்திற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருக்கு கடந்த மாதம் 9 ஆம் திகதியிடப்பட்ட அழைப்பிதழ் ஒன்றை சீனா அனுப்பியதோடு மே மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பு வருகையை உறுதி செய்யுமாறும் கோரப்பட்டது.

இதற்கான பதிலை மே மாதம் 22 ஆம் திகதிவரை துணை வேந்தர் வழங்காதபோது 23 ஆம் திகதி அமைச்சரின் ஒரு மாவட்டத்திற்கான தனிப்பட்ட செயலாளர் துணை வேந்தரை மிரட்டும் தொணியில் அதற்கு பதிலளிக்குமாறு கோரியுள்ளார்.

இருந்தபோதும் எவர் கூறியும் அதனை கேளாத துணைவேந்தர் வழமையான பாணியில் இதனையும் செவிசாய்க்காதமை மட்டுமன்றி இந்தக் காலத்தில் சீனாவின் மற்றுமோர் நீண்டகால எதிரிநாடான ஜப்பானிற்கு பயணமாகிவிட்டார்.

இந்த நிலையில் தொடர்ந்தும் தன் முயற்சியில் தளராத விக்கிரமாதித்தன் போன்று சீனாவும் முயல்கின்றது. இதனால் எதிர் காலத்தில் கடல் சார் அறிக்கைகள் சீனாவிற்கு சார்பாக மாற்றப்படுமா என இந்தியாவும் அஞ்சுகின்றது.




தற்போது நாரா அமைப்பிற்கு சீன சார்பு நிலை கொண்டவர் என்று கருதப்படும் மூத்த பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை, இலங்கையின் வட கடல் பகுதியில், கேந்திர ரீதியான பொருளாதர போட்டிக்கு வழிவகுக்கும் என்ற கவலைகள் எழுந்துள்ளன. அண்மை காலத்தில் சீனாவின் உயரதிகாரிகள் வட மாகாணத்தின் பல பகுதிகளிற்கு விஜயம் செய்வது, ஓரிரு தினங்கள் தங்கியிருந்து நடுநிசியில் கடலிற்குள் இறங்குவது, ட்ரோன்களை பறக்கவிட்டு ஆய்வுகளை மேற்கொள்வது போன்றவையும் அவதானிக்கப்பட்டுள்ளன.

சீன உயரதிகாரிகள் பாக்கு நீரணைப் பகுதியில் தீவிர கண்காணிப்புகளை மேற்கொள்வதை இந்தியா அறிந்துள்ளதா, அறிந்தும் நடவடிக்கை எடுக்க தயங்குகிறதா அல்லது மறைமுகமாக தமது இயலாமையை வெளிப்படுத்துகிறதா என்றெல்லாம் துறைசார் மக்கள் வெளிப்படையாகவே பேசுகின்றனர்.

இதன் பின்புலத்தில் இலங்கையின் வடகடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்தால் அது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு நேரடியாக விடப்படும் ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கும் என்பதையும் மறுக்க முடியாது.

(_14_ பக்கத் தொடர்ச்சி)

# மனித புதை குழிகள் மர்மங்களை மூடி மறைக்கும் இலங்கை அரசின் நடவடிக்கை அம்பலம்

கடந்த காலங்களில் நடைபெற்றவை தொடர்பில் அதற்கு பரி-காரம் தேடும் வகையில் இலங்கை அரசு தீவிரமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதினால், அனைத்து மனித புதை குழிகள் மற்றும் தோண்டியெடுக்கபட்ட உடல்கள் தொடர்பில் பன்னாட்டு பார்வையாளர்களை அனுமதிக்கவும், அவர்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசு செயற்பட உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

“இந்த நாட்டில் புதைப்பதில் நாம் வல்லவர்களாக இருக்கிறோம், ஆனால் உண்மைகளை தோண்டி எடுப்பதில் அந்த வல்லமை எமக்கு இல்லை” என்று இந்த அறிக்கையை இணைந்து எழுதியுள்ள, இலங்கையில் ஜனநாயகத்திற்கான செய்தியளர்கள் அமைப்பைச் சேர்ந்த பாஷன அபேவர்த்தன.

குற்றங்களை ஆவணப்படுத்துவது, ஆதாரங்களை சேகரிப்பது மற்றும் அதை பாதுகாப்பது ஆகியவை இந்த புலனாய்வில் மிகப்பெரும் சவால்களாக இருந்தன என்று அறிக்கையை தயாரித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கை இலங்கையை முன்னாள் யூகஸ்லாவியா, குவாதமாலா, அர்ஜெண்டினா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளுடன் ஒப்பிட்டது. அந்த நாடுகளிலும் வெற்றிகரமாகஇவ்வாறு மனித புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டு உடல்கள் தோண்டி எடுக்கபட்டாலும், உரிய விசாரணைகள் நடைபெறு, உடல்கள் அல்லது உடல் எச்சங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கபட்டன.

“அது உண்மையில் இலங்கையில் நடைபெறாதற்கு காரணம் அதற்கான வல்லமை அவர்களிடம் இல்லை என்பதில்லை ஆனால் மாறாக அங்கிருக்கும் கட்டமைப்பு அதை அனுமதிப்பதில்லை” என்று இந்த ஆய்வறிக்கையின் மற்றொரு எழுத்தாளரான இங்கிரிட் மஸாஜ் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் போதியளவில் சட்டம் மற்றும் கொள்கை ரீதியில் நடைமுறை படுத்தக்கூடிய கட்டமைபுகள் இல்லை என்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. கடந்த 2000ஆம் ஆண்டு நாடு முழுவதிலும் காணாமல் போனவர்கள் அல்லது முறையான அனுமதியின்றி பொருட்கள் (எச்சங்கள்) அகற்றப்பட்டவை தொடர்பில் சில சீரமைப்புகளைச் செய்ய ஐ நாவின் செயற்குழு பரிந்துரை செய்திருந்தது. மரண விசாரணை தொடர்பில் புதிய சட்டமொன்றும் நிலையான வழிகட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் அவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவில்லை, அல்லது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் கலந்தாலோசிக்கபடவில்லை என்பது கவனிக்கத்தக்கது என்கிறது இந்த ஐந்து மனித உரிமைகள் அமைப்பின் நாடு தழுவிய ஆழமன ஆய்வறிக்கை.

கடந்த காலங்ளில் இடம்பெற்றவைகளிற்கு பரிகாரம் தேடுவதற்கு, இனி எந்த மனித புதை குழி தோண்டி ஆராயப்பட்டாலும், அதன் போது சர்வதேச பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் இந்த ஐந்து அமைப்புகள் தெரிவித்துள்ளது, பொறுப்புக்கூறல் தொடர்பில் புதன்கிழமை ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தில் அதன் பிரதி ஆணையர் தெரிவித்த கருத்துக்களுடன் எதிரொலிகிறது.


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

- Painting
- Bathrooms
- Kitchens
- Decks
- Flooring
- Basements
- Pot lights
- Accent Walls

Contact us 416.706.8160

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRPLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# இலங்கையின் சகல துறைகளிலும் கால்பதிக்க முனையும் சீனா

## (கனடா உதயனின் சிறப்பு ஆய்வுக் கட்டுரை)

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



மன்னராட்சி காலத்தில் எழுதிக்கொடுப்பதை போல அண்மைய ஆட்சியாளர்கள் இலங்கையை சீனாவிற்கு எழுதிக்கொடுத்து விட்டார்களோ அல்லது சீனாவின் நாடு பிடிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கை ஆக்கிரமிக்கப்படுகிறதா என்று எண்ணத் தோன்றுகிறது.

உள்ளூர் மக்களிற்கே தெரியாமல் பல விடயங்கள் சீனாவால் முன்னெடுக்கப்படுகிறது என்பதே நாட்டில் யதார்த்தம்.

இலங்கையின் எந்த மாவட்டத்தில் எந்த திட்டத்தை சீனா மேற்கொள்ளவுள்ளது என்பதனை கண்டறிய இலங்கை மக்களின் சனத்தொகையே போதாது என்கின்ற நிலைமைக்கு இலங்கை தள்ளப்பட்டு விட்டது. ஏனெனில் அனைத்து திட்டங்களுமே ஆரம்பத்தில் இரகசிய திட்டங்களாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

சீனா இவ்வாறு இரகசியமாக திட்டங்களை முன்னெடுக்க, யாழ்ப்பாணக் குடாநாட்டில் மூன்று தீவுகளில் மின்சார உற்பத்தி திட்டம் அமைச்சரவை அங்கீகாரத்தின் பின்பும் இரத்தாகிய அனுபவமும் சீனாவை உசாரடைய வைத்திருக்க கூடும் என்றே கருதப்படுகின்றது.

கடந்த ஆண்டு கொழும்பில் பேச்சுவார்த்தைக் குழுவொன்றை நியமித்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அப்போதைய துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின்படி, சிறிலங்காவின் அக்சஸ் இன்ஜினியரிங் மற்றும் கொழும்பு துறைமுகத்துடன் இணைந்து 392 மில்லியன் டொலர் செலவில் BOT திட்டமாக லாஜிஸ்டிக்ஸ் மையத்தை அமைப்பதாக சைனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் தெரிவித்துள்ளது. டீழுவு திட்டம் என்பது குறித்த காலத்திற்கு முதலீட்டாளருக்கும் பின்னர் அரசிற்கும் உரித்தானதை குறிக்கின்றது. அதாவது கட்டி - செயற்படுத்தி - கையளிக்கும் திட்டமாகும்.

தெற்காசிய வர்த்தக மையமானது - 50 வருட BOT திட்டமாக இருக்கும் கொழும்பு துறைமுகம் 70% பங்குகளையும், Access Engineering மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை தலா 15% பங்குகளையும் கொண்டிருக்கும். இந்த திட்டமானது "ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு 26 மில்லியன் அமெரிக்க டொலர் முற்பணமாகவும் கூடுதலாக 126 மில்லியன் டொலர் செலுத்தப்படும்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது. கொழும்பு துறைமுகத்தின் மையப்பகுதியில் 530,000 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட எட்டு மாடிக் கட்டடம் ஒன்று இதற்காகவே கட்டப்படவுள்ளது. 2023ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு 2025 ஆம் ஆண்டின் இறுதியில் இது நிறைவடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது உயர்த்தப்பட்ட துறைமுக அணுகல் நெடுஞ்சாலை வழியாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துடன் இணைக்கப்படும்.



இந்த மையமானது பல நாடுகளின் ஒருங்கிணைப்பு, கொள்கலன் சரக்கு நிலையமாகவும் விளங்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு பொது கிடங்கு மற்றும் பெறுமதிசார் சேவைகள் உட்பட பல சேவை-களை வழங்கும். இது தொடர்பில் துறைமுக அதிகார சபையின் செய்தித் தொடர்பாளர் சித்ரல் ஜெயவர்ண, "துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சினால் ஒப்பந்தம் கையாளப்படுவதால், ஒப்பந்தம் தொடர்பான உரிய தகவல்கள் துறைமுக அதிகார சபையிடம் இருந்து பெற முடியவில்லை" என கூறியுள்ளார். துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தை தொடர்பு கொள்ள முயன்றும் அது பலனில்லை.

இவை மட்டுமன்றி இக்கட்டுரை பிரசுரமாகும் போதும் இலங்கையில் எந்த திட்டத்தின் ஊடாகவும் உள்வர சீனா முனைகின்றதா என தற்போது பலரையும் உசாரடைய வைத்துள்ளதுள்மை நியாயமான சந்தேகமாகவே காணப்படுகின்றது. ஏனெனில் கடந்த மே மாதம் இறுதியில் அதாவது 2023-05-26 முதல் கொழும்பு ஷாங்ரி லா ஐந்து நட்சத்திர விடுதியில் ஒரு வாரமாக மிகப் பெரும் சீன அதிகாரிகள் கூட்டம் தங்கியிருந்துள்ளனர்.

இவ்வாறு தங்கியிருந்த சீனர்களின் எண்ணிக்கை 40 முதல் 50 வரையானோர் எனவும் இவர்களுடன் கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தின் அதிகாரிகளும் உடனிருந்தமை மட்டுமன்றி பல கட்ட சந்திப்புக்கள் கூட்டங்களும் இடம்பெற்றுள்ளன. இந்தச் சந்திப்புக்களின் போது சீன விசுவாசிகள் மட்டுமன்றி இருபக்கமும் தலையை காட்டும் அரசியல்வாதிகளும் பங்குகொள்ளத் தவறவில்லை.




இங்கே இடம்பெற்ற இரவு விருந்து உபசாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (தற்போதைய) தலைவர்களில் ஒருவரும் பங்குகொண்டிருந்தார் எனபது மட்டுமன்றி அங்கே ஓர் சங்கடமான நகைச் சுவையும் இடம்பெற்றுள்ளது.



ஷாங்ரி லா விடுதியிலே அந்த சமயம் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நெதர்லாந்து தூதுவரைச் சந்திக்கச் சென்றுள்ளார். சந்திப்பை நிறைவு செய்து வெளியேறும் சமயம் அங்கே அதிக சீன நாட்டவர்களின் பிரசன்னத்தைக் கண்டு என்ன ஏது என எவரிடம் வினவலாம் என நாலுபக்கமும் தேடிய சமயம் அங்கே நின்ற இலங்கைக்கான சீன நாட்டுத் தூதரகத்தின் அதிகாரி இந்த நாடாளுமன்ற உறுப்பினரை இனம் கண்டுவிட்டார். அப்போது சீன அதிகாரி ஓடிச் சென்று நாடாளுமன்ற உறுப்பினரை வரவேற்று உங்களிற்கும் இன்றைய சந்திப்பிற்கு நேரம் தந்தனர், உங்கள் சக உறுப்பினர் இரு நாட்களிற்கு முன்னர் இரவு உணவுடன் வந்து சந்தித்து சென்றாரே என உளறிவிட்டார்.

இந்த நேரம் சீன அதிகாரிகளுடன் தேவையற்று வாயை கொடுத்து அதனால் இந்தியாவிடம் மாட்டுப்பட விரும்பாத தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அவரிடம் இருந்து தப்பி பிழைத்து வெளியேறி விட்டார். இவ்வளவு அதிக சீன அதிகாரிகள் கொழும்பிற்கு ஒரு வாரமாக ஏன்- எதற்கு வந்தனர் என பலரும் தற்போதே தலையை பிய்க்கின்றனர்.

நெதர்லாந்து தூதுவரை சந்திக்கச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினரிடம் நீங்கள் சீன அதிகாரிகளிடம் என்ன பேசினீர்கள் என வினாவியபோது ஐயகோ! சீன அதிகாரிகள் அந்த விடுதியில் நிற்பதே எனக்கு தெரியாது அவர்கள் என்னை அனுகியபோதே அவர்கள் அந்த விடுதியில் நின்றமை எனக்கும் தெரியும் என்றார்.

இதேநேரம் கடந்த மே 18ஆம் திகதி இரவு இலங்கைக்குள் போலிக் கடவுச் சீட்டு மூலம் நாட்டிற்குள் வந்த சீன பிரஜைகள் தம்மை மீண்டும் சீனாவிற்கு அனுப்புவதை தடை செய்யக்கோரி கடந்த 22 ஆம் திகதி இலங்கையின் மேன் முறையீட்டு நீதிமன்றில் றிட் மனு ஒன்றை தாக்கல் செய்த சமயம் சட்டமா அதிபர் சார்பில் மன்றிற்கு சமர்ப்பித்த விடயம் மேலும் தூக்கிவாரிப் போட்டுள்ளது. அதாவது அந்த சீனப் பிரஜை சீனாவிலேயே தேடப்படும் ஓர் நபர் என சீனத் தூதரகம் அறிவித்துள்ளதாக மன்றுக்கு தெரிவித்துள்ளார். இதனால் சீனப் பிரஜை சார்பில் தாக்கல் செய்த மனு விலக்கிக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு இலங்கைக்குள் போலிக் கடவுச் சீட்டில் ஊடுருவிய சீனப் பிரஜை ஏன், எதற்கு வந்தார் என்பது ஒரு விடயமாக இருக்கும் நிலையில் அவ்வாறு மோசடி கடவுச் சீட்டில் இலங்கை வந்தவர் தொடர்பில் இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் கூறியமை உண்மையான தகவல்தானா எனவும் தற்போது ஆராயப்படுகின்றது. ஏனெனில் அவ்வாறு கூறி அந்த சீனப் பிரஜையை தப்பிக்க வைக்கும் முயற்சியா என்றும் ஓர் சந்தேகம் உள்ளது.

இவை இவ்வாறு இருக்க ஷாங்ரி லா விடுதியில் தங்கியிருந்த பெரும் சீன அதிகாரிகளின் இலங்கைக்கான பயணம் தொடர்பில் தற்போதுதான் பலரும் அறிந்து கொண்டமையினால் மிகத் தீவிரமாக ஆராயப்படுகிறது.

அங்கு இரவு விருந்தில் கலந்துகொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் என்ன தகவல் எப்போது வந்தாலும் அது தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டால் இல்லை என அவரும் மறுத்து வந்தாலும் அவரும் தொடர்ச்சியாக அகப்பட்ட வண்ணமே உள்ளார். இவ்வாறெல்லாம் உள்ளூர் அரசியல்களும் அரசியல்வாதிகளின் விடயங்களும் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ அந்த அளவிற்கு இன்று இலங்கையில் சீனா தொடர்பிலும் பல விடயங்கள் உலாவுகின்றன.

இலங்கையில் நிலவிய உச்சபட்ச பொருளாதார நெருக்கடியினைப் பயன்படுத்தி சீனா இலங்கையில் அகலக்கால் பதித்தமையே இதற்கு காரணம் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இலங்கையில் அம்பாந்தோட்டை முதல் போர்ட் சிற்றி என தனி நுழைவு விசா அனுமதியுடன் கூடிய இடங்களையே தமதாக்கிய சீன அரசு, கிழக்கு மாகாணத்தின் பல இடங்களையும் முன்னாள் ஆளுநர் ஊடாக கண் வைத்திருந்தது. இவை ஒருபுறம் நகரும் சமயமே தற்போது சீனாவின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நாடு முழுவதும் முளைக்கவுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 110 எரிபொருள் நிரப்பு நிலையம் வரவுள்ளதாக கூறப்படுவதனால் சீனாவின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் அமைக்கப்படலாம் என்றே கூறப்படுகின்றது.

இலங்கையில் ஏற்கனவே இந்தியாவின் ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் நிரப்பு நிலையங்களை கொண்டிருப்பதனால் சீனாவும் இதனை நாடுகின்றதா அல்லது இந்த திட்டத்தில் தனக்கு நட்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை இந்தியாவின் திட்டம் நட்டம் ஏற்பட வேண்டும் என சீனா எண்ணுகின்றதா என்பது புரியாத புதிரகவே உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய பொது வைத்தியசாலையும் முழுமையாக சீனாவிற்கு வழங்கப்படவுள்ளது. திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை தற்போது இருக்கின்ற இடத்தில் இருந்து 6ம் கட்டை பகுதியை நோக்கி முழுமையாக இடமாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதோடு பழைய வைத்தியசாலை கட்டடம் சீன சுற்றுலா விடுதி ஒன்றிற்காக வழங்கப்படவிருப்பதாகவும் அறிய முடிகிறது.

இது தொடர்பான கலந்துரையாடல் கொழும்பில் இருந்து வருகை தந்தவர்களுடன் அண்மையில் அந்த வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது. அன்றையதினம் வைத்தியசாலைக்கான புதிய இடமும் பார்வையிடப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் 50 ஏக்கர் காணியில் புதிதாக வைத்தியசாலை அமைக்கப்பட்டு பழைய வைத்தியசாலைக் கட்டிடம் சீனாவிற்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையில், எங்கும் சீனா, எதிலும் சீனா என்கிற நிலை நாடளவில் உள்ளது என்பதே உண்மை நிலை.



# ஜனாதிபதி ரணிலும் தேர்தல்களும்

**- வீரகத்தி தனபாலசிங்கம்**



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில் எவருமே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் போன்று தேர்தல்கள் பற்றி விசித்திரமான கருத்துக்களை வெளியிட்டதாகவோ அல்லது தேர்தல் ஒன்றை நடத்தவிடாமல் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடையறாது இடையூறுகளைச் செய்ததாகவோ நாம் அறியவில்லை.

ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சியும் படுமோசமான தோல்வியைச் சந்திக்கவேண்டிவரும் என்பதைத் தவிர உள்ளூராட்சி தேர்தல்களை அரசாங்கம் விரும்பாததற்கு உண்மையில் முக்கியமான வேறு காரணம் எதுவும் இருந்திருக்க முடியாது. நிதி நெருக்கடியை காரணம் காட்டி இடையூறுகளைச் செய்து அந்த தேர்தல்களை ஆணைக்குழு காலவரையறையின்றி ஒத்திவைக்க நிர்ப்பந்தித்த அரசாங்கம் தற்போது பொருளாதார நிலைவரத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுவருவதாக பெருமை பேசுகின்ற தருணத்திலாவது தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்க முன்வருமா என்றால் அதற்கான அறிகுறிகளும் இல்லை.

அந்த தேர்தல்களை நடத்துவதற்கு நிதியை தருமாறு மீண்டும் அரசாங்கத்திடம் கேட்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

ஆனால், ஜனாதிபதி தேர்தலை தவிர, வேறு எந்த தேர்தலைப் பற்றியும் ஜனாதிபதியோ அல்லது அரசாங்க அரசியல்வாதிகளோ பேசுவதாக இல்லை. குறிப்பாக, ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகள் அடிக்கடி அடுத்த வருட முற்பகுதியில் அந்த தேர்தலை நடத்துவதற்கான வலுவான சாத்தியம் குறித்து கருத்துக்களை வெளியிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது. எந்த தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்ளத் தயாராயிருப்பதாக கூறும் ராஜபக்சாக்களும் அவர்களது கட்சியின் அரசியல்வாதிகளும் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு எதிரான இடையூறுகளுக்கு தங்கள் ஒத்துழைப்பை முழுமையாக வழங்கினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பொறுத்தவரை, அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக வேறு எந்த தேர்தலையும் நடத்த முன்வரப்போவதில்லை என்பதை புரிந்துகொள்வதற்கு எவரும் அரசியல் நிபுணராக இருக்கவேண்டியதில்லை. உள்ளூராட்சி தேர்தல்களையோ, மாகாணசபை தேர்தல்களையோ அல்லது பாராளுமன்ற தேர்தலையோ நடத்தி ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தங்களது பலவீனம் அம்பலமாவதற்கு வாய்ப்பைக் கொடுத்துவிடக் கூடாது என்பதில் விக்கிரமசிங்க மிகவும் உறுதியாக இருக்கிறார். எதிர்பாராத விதமாக அரசியல் விபரீதம் எதுவும் ஏற்பட்டுவிடாத பட்சத்தில் இந்த நிலைமையே தொடரும்.

இத்தகைய பின்புலத்திலேயே அண்மையில் நுவரேலியாவில் நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய சட்ட மகாநாட்டில் உரையாற்றிய விக்கிரமசிங்க தேர்தல்களில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாக தெரிவித்த கருத்தை நோக்கவேண்டும்.

இளைஞர்கள் உட்பட அதிகப்பெரும்பான்மையான மக்கள் தேர்தல்களில் மாத்திரமல்ல, அரசியல் கட்சி முறைமையிலும் கூட நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றும் அடுத்து வரக்கூடிய தேர்தல் ஒன்றில் சகல கட்சிகளும் சேர்ந்து பெறக்கூடிய வாககுகள் மொத்த வாக்குகளில் ஐம்பது சதவீதத்தை தாண்டப்போவதில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

உள்ளூராட்சி தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணை செய்யும் உயர்நீதி மன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதியரசர்களும் அந்த சபையில் விக்கிரமசிங்கவின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தவிடாமல் தடுத்து மக்களின் வாக்குரிமையை ஆபத்துக்குள்ளாக்கியிருக்கும் ஒரு ஜனாதிபதி தேர்தல்களில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாக எவ்வாறுதான் கண்டுபிடித்தாரோ தெரியவில்லை. ஜனாதிபதி தேர்தலில் மாத்திரம் அக்கறை காட்டுகின்ற விகிரமசிங்க மக்களுக்கு அந்த தேர்தலை தவிர மற்றைய தேர்தல்களில்தான் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது என்று என்று நினைக்கிறாரோ?

விக்கிரமசிங்கவை பொறுத்தவரை, தன்னால் வெற்றிபெறமுடியாது என்று நம்பிய எந்த தேர்தலையும் தவிர்த்த ஒரு வரலாற்றைக் கொண்டவர். இரு ஜனாதிபதி தேர்தல்களில் முதலில் சந்திரிகா குமாரதுங்கவிடமும் அடுத்து மகிந்த ராஜபக்சவிடமும் தோல்வி கண்ட அவர் அதற்குப் பிறகு ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடவே இல்லை.

இரு ஜனாதிபதி தேர்தல்களில் மகிந்தவுக்கு எதிரான எதிரணியின் பொதுவேட்பாளர்களை ஆதரித்த விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவை எதிர்த்து சஜித் பிரேமதாசவே களமிறங்கினார்.

ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்த விக்கிரமசிங்க ஒரு தடவையேனும் முழுமையாக பதவிக்காலத்தை நிறைவுசெய்ததில்லை. இலங்கையில் நீண்டகாலம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்தவர் என்ற "பெருமைக்கு" உரியவரான அவரைப் போன்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னைய எந்தவொரு தலைவரும் நீண்டகாலம் தலைமைப் பொறுப்பில் இருந்ததில்லை; அது மாத்திரமல்ல உட்கட்சி கிளர்ச்சிகளை எதிர்நோக்கியதுமில்லை.

சுமார் மூன்று தசாப்த காலமாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருந்துவரும் அவர் இறுதியில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட வென்றெடுக்க முடியாத ஒரு கட்சியாக அதை வரலாற்றுத் தோல்விக்கு வழிநடத்தினார். அதிர்ஷ்டவசமாக கிடைத்த தேசிய பட்டியல் ஆசனத்தை பயன்படுத்தி அதுவும் பத்து மாதங்கள் கழித்து அவர் பாராளுமன்றத்துக்கு வந்ததற்கு பின்னரான நிகழ்வுகள் அண்மைக்கால வரலாறு.

இத்தகைய கடந்த காலத்தைக் கொண்ட அவர் தன்னிடமிருந்து மூன்று தசாப்தங்களாக நழுவிக்கொண்டிருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ராஜபக்சாக்களின் உதவியுடன் பாராளுமன்றத்தின் மூலமாக வசப்படுத்திக்கொண்ட பிறகு மீண்டும் மக்களின் ஆணையைப் பெற்று ஜனாதிபதியாக வரும் எதிர்பார்ப்புடன் தனது அரசியல் வியூகங்களை வகுத்துவரும் நிலையில் தேர்தல்களில் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்று கூறி தன்னை ஒரு பொருந்தாத்தன்மைக்கு ஆளாக்கியிருக்கிறார்.

இலங்கை வரலாறு காணாத கடந்த வருடத்தைய அறகலய கிளர்ச்சிக்கு பிறகு நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய சிந்தனை மாற்றத்தையும் அந்த கிளர்ச்சிக்கு பின்னரான அரசியல் நிலைவரங்கள் குறித்த மக்களின் மனநிலையையும் அறிந்துகொள்வதற்கான ஜனநாயக மார்க்கம் தேர்தல் ஒன்றேயாகும். அதை செய்து காட்டுவதற்கு தனக்கு கிடைத்த முதல் சந்தர்ப்பமான உள்ளூராட்சி தேர்தல்களையே தடுத்த அரசாங்கத்தின் தலைவர் மக்கள் தேர்தல்களில் நம்பிக்கை இழந்துவிட்டதாக கூறுவது அறவே பொருத்தமற்றது.

மக்கள் அரசியல் கட்சி முறைமையின் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர் என்ற அவரின் கூற்றை மக்கள் பாரம்பரிய அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டதாகவே உண்மையில் நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

இலங்கையின் முக்கியமான ஒரு அரசறிவியல் நிபுணரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட அண்மையில் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியதைப் போன்று பழைய பாரம்பரிய கட்சிகளில் நம்பிக்கை இழந்த மக்கள் புதிய அரசியல் சக்திகளை அடையாளம் கண்டு அதிகாரநிலைகளுக்கு கொண்டுவருவதற்கு இருக்கக்கூடிய ஒரே ஜனநாயக வழி தேர்தல்களேயாகும். பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி அவற்றுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதை விடுத்து நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் மக்களின் ஜனநாயக அபிலாசைகளை மதிக்கவேண்டிய பொறுப்பை உணர்ந்தவராக விக்கிரமசிங்க நடந்துகொள்ளவேண்டும்.

## கண்ணன் வருவான்

---

திருப்பாற் கடலில் தூக்கங் கொண்டாயே!
திருமகள் துணையில் அமைதி கண்டாய்
இரணியன் அகந்தை எரித்தவன் நீயே!
எழுவாய் புவியில் அரவின் மீதே!
அண்ணலின் ஆருயிர் அழகு ராதையே!
ஆண்டாள் அவனுக்கு எந்நாளும் சேவையே!
கண்ணா உன்னால் காலங்கள் இயங்குதாம்
கீதை எமக்கு உனது வரமே!

பரந்தாமன் இசைக்கும் புல்லாங்குழல் கையில்
பசுமாடு துணையாய்க் கேசவன் அருகில்
திருப்பதி வேங்கடனாய்த் திருநாமம் கொண்டவா
திருவருளால் திறல்பெற்று தரணியை அளந்தவா
பாரதத்தின் தளபதி பார்த்த சாரதியே!
பார்த்தனைப் பாதுகாத்துத் தந்தவன் நீயே!
பாரதப்போர் முடிக்கப் பணிலம் எடுத்தாயே!
பாஞ்சாலி புகழ்காக்க உன்கை கொடுத்தாயே!

கோபியர் சேலையைக் கவர்ந்த கள்வன்
கோகுலக் கண்ணன் கோபால மன்னன்
கோபிகை நடுவே கண்ணனின் நாதம்
குருவாய் ஊரினில் குழந்தைகள் கீதம்
கோசலைக் குமரா கொஞ்சும் மணிராமா
காஞ்சி நகரின் காவலனே வரதராஜா
பாசனம்மேல் பாற்கடலில் பள்ளி கொள்பவனே!
பரமனே பள்ளி எழுந்து அருள்வாயே!

கண்ணனை நினைத்தால் கருமங்கள் பலிக்கும்
காலம் தோறும் நினைத்தது நடக்கும்
கண்களைப் போலெமைக் காவல் புரியும்
காவலனே காணிக்கை உனக்கு மாதவனே!
குருவாயூர் தன்னில் குடியேறி உள்ளவன்
கொடியோடு மதுராவை அரசு செய்பவன்
திருமலை உறையும் திருமால் ஏந்தலே!
தினமுனை சேவிக்க வரமெனக் கருள்வாயே!.

அண்ணல்---பெருமையிற் சிறந்தவன்
திறல்---வலிமை
பாசனம்---மரக்கலம்
பணிலம்---சங்கு,
கோபிகை---இடைப்பெண்


---

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# வருடாந்த மஹோற்சவ பெருவிழா விஞ்ஞாபனம் 2023







## அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம்

**230 வில்கின்சன் சாலை, பிராம்ப்டன், ON L6T 4N7**

தொலைபேசி: **905-459-7042.** செல்: **416-615-0005**

Email: bramptonbhuvaneswari@gmail.com

www.Bhuvaneswariamman.ca

அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும்.
பங்கயக்கரத்தாள் பீதாம்பரமணியிடையாள் பொற்பூண்.
மைபங்கள நிரம்பப் பூண்டாள்
பதினாறு கலையெழுத்துள்.
பொங்கிய ஒரெழுத்தாள் புவனேசி பாதம் போற்றி.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அடியார்களே! உலகின் பல்வேறு ஜீவராசிகள் உய்யும் பொருட்டு ஸ்ரீபிரம்மி மாகேஸ்வரி கௌமாரி வைஸ்ணவி வாராஹி இந்திராணி சாமுண்டா ஸப்த மாதர்களையும் ஒருங்கே கொண்டு ஆதியாய் அனாதியாய் ஒன்றாய் நீக்கமற ஸப்த லோகத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாய் எல்லா வளங்களும் நிறைந்து கனடா நாட்டில், பிராம்ப்டன் நகரில் எழுந்தருளி அருள் பாலித்துவரும்

ஸ்ரீமாதா ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை த்வஜரோகணம் தீர்த்த மஹோத்ஸவ உற்சவத்துடன் தொடங்கி பதினைந்து தினங்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் நிகழ அன்னையின் திருவருள் பாலித்துள்ளது.

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி 11ம் தேதி (25-06- 2023) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதி உத்திர நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்குமேல் 11.00 மணிக்குள் துவங்கி அடியார்கள், தொண்டர்கள், உற்சவ உபயதாரர்கள் அனைவரும் சடங்குகளாக கீழே உள்ள பட்டியலில் உள்ள நிகழ்வுகளை அறிந்து, ஸ்ரீ புனேஸ்வரியின் பூரண அருள் பெற்று, சகல செல்வங்களையும் நீண்ட ஆயுளையும் பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.

**24-06-2023 சனிக்கிழமை மாலை: அனுக்ஞை கணபதி பூஜை கணபதிஹோம் கிராமசாந்தி. வாஸ்துசாந்தி. அங்குரார்ப்பணம், ம்ருத்ஸங்கிரஹணம். யாகசாலை நிர்மாணம் நடைபெறும்.**

| 25-06-2023 | 30-06-2023 | 07-07-2023 | 08-07-2023 | 09-07-2023 |
|---|---|---|---|---|
| ஞாயிறு | வெள்ளி | வெள்ளி | சனி | ஞாயிறு |
| கொடியேற்றம் | மஞ்சம் | சப்பறம் | தேர்த்திருவிழா | தீர்த்தம் |

## திருவிழாக்கால நிகழ்ச்சி நிரல்

### காலை திருவிழா

காலை 7.30 மணி காலசாந்தி பூஜை
காலை 8.30 மணி ஸ்நாபன கும்ப பூஜை, மூலவர். அபிஷேகம்
காலை 10.00 மணி உச்சிகால பூஜை. கொடிஸ்தம்பபூஜை
யாகபூஜை
மதியம் 11.30 மணி
வசந்தம்டப பூஜை. யாகசாலை தரிசனம்.
மதியம் 12.30 மணிக்கு பிரசாதம் வழங்குதல்

### மாலை திருவிழா

5.00 மணி: ஸ்தாபன கும்பாபிஷேகம்
6.30 மணி: மூலஸ்தான பூஜை. ஸ்தம்ப பூஜை
7.30 மணி: கலை நிகழ்ச்சிகள்.
8.30 மணி: வசந்தம் பூஜை.
அம்பாள் வீதியுலா நித்யாக்னி, யாகசாலை தரிசனம்
9.00 மணி: பிரசாதம் வழங்குதல்.

### சர்வபோதகம்

சிவமரத்னா: சிவஸ்ரீ.வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
மஹோற்சவ குருமார்கள்: சிவஸ்ரீ. மகேஸ்வர குருக்கள்
சிவஸ்ரீ. இராதாகிருஷ்ண குருக்கள்
சிவஸ்ரீ. கௌசிக் குருக்கள்

கனடாவாழ் குருமார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்
முக்கிய குறிப்பு :
தேர் தீர்த்தத் திருவிழா அன்று பால்குடம் மஞ்சள் குடம்
அங்கபிரதக்ஷணம் காவடி கற்பூர சட்டி எடுக்க விரும்புவோர் முன்பதிவுக்கு
காரியாலத்தை தொடர்பு கொள்ளவும் 905-459-7042

தேவஸ்தான மங்கள இசை:
வித்வான். திரு சிவமயம் குழுவினர்.
புஷ்ப அலங்காரம், பூமாலைகள்:
திரு. அருந்தவராசா (Harini Foods)
திரு. பாலா (ஐஸ்வரியம் ஸ்டோர்ஸ்)
ஆலய நிர்மான ஸ்தபதி: விஸ்வபிரம்ம திரு. குணாளன்

என்றும் ஸ்ரீபுவனேஷ்வரி ஸம்ருதியில்
சிவமரத்தினம்: சிவஸ்ரீ. வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
ஸ்தாபகர், தலைமை அர்ச்சகர்
இல்லத்திருமணம் குடிபுகுதல்
சாந்தி பரிகாரப்பூஜைகளுக்கு அனுகவும்
416-615-0005

உங்கள் குடும்ப விழாக்களை கொண்டாட அழகிய மண்டபம் உள்ளது விபரங்களுக்கு ஆலயத்தை அணுகவும்

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1053



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கறுப்பளை பத்ரகாளி அம்பாள் ஆலயம் பொலநறுவை

*" சிலையாக நின்றாலும் சீரான வாழ்வுதரும்*
*செம்மை சேர் எழிலரசி*
*செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து*
*தேவியுந் தன் அருளாசியே*
*நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்*
*நீடுபுகழ் உலகரசியே*
*நத்திடும் நங்கையர் மாங்கல்யம் காத்திடும்*
*நாயகி மாதரசி நீயே. "*

இவ்வாறான நிலையில் தாம் குடியேறிய புதுக்கிராமத்தில், தமது பழைய காளி கோயிலைப்போல ஒரு கற்கோயிலை காளி அம்பாளுக்கு கட்ட வேண்டுமென விரும்பினர். ஆரம்பத்திலிருந்து காளிகோயிலுக்கென சேமிக்கப்பட்டப பணத்தோடு, தமது மக்களிடமும் பணம் சேகரித்து கற்கோயில் கட்டுவதற்கான ஆயத்தங்களைச் செய்தனர். முன்பிருந்த கற்கோவிலை விட சற்றுப் பெரிதாக இக்கோயில் அமைக்கப்பட்டது. போரைதீவு என்னும் ஊரிலிருந்து மூலமூர்த்தி தருவிக்கப்பட்டு இரண்டாயிரமாம் ஆண்டு, மிகச் சிறப்பாக கும்பாபிஷேகமும் நிறைவேறியது.

வருடந்தோறும் வைகாசிமாத விசாக நட்சத்திரத்தன்று, கண்ணகி அம்மன் திருக்குளிர்த்தியும், ஆவணிமாதப் பௌர்ணமி தினத்தன்று, பத்திரகாளி அம்பாள் உற்சவமும் நடைபெறும். ஆவணிமாதப் பௌர்ணமி தினத்தன்று முடிவுறும் வகையில் ஐந்து நாட்கள், காளிகோயிலின் வருடாந்த உற்சவம் நடத்தப்பட்டது. இக்கோயிலின் உற்சவ முறைகள், ஏனைய கோயிலின் உற்சவ முறைகளினின்றும் வேறுபட்ட முறையிலே காணப்பட்டது. சடங்கின் ஆரம்ப நாளன்று, "வட்டாமடை எடுத்தல்" என்னும் நிகழ்வு நடைபெறும்.


கோயிலிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள, பிள்ளையார் ஆலயத்திலிருந்து மாலையிலே தெய்வம் ஆடுபவர்களோடு, அன்னையின் முகக்களை வைக்கப்பட்ட வட்டா, பிள்ளையார் ஆலயத்திலே வைத்துப் பூசை செய்யப்படும். இதனை பெரியவர் ஒருவர் பிள்ளையார் கோயிலிலிருந்து, காளி கோயிலுக்குக் கொண்டு வருவர். இவ்வட்டாமடை ஆலயத்தை அடைந்ததும் ஆலயக்கதவு திறக்கப்படும். இதனை கதவு திறத்தல் என அழைப்பர். இதனைத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறும். இவ்வாலயத்திலே ஐந்தாம் நாளன்று இடம்பெறும் தீமிதிப்பு வைபவத்தோடு ஆலய வருடாந்த உற்சவம் நிறைவுபெறும்.

கருநிறமுடையவளான காளி, தீமைகளையும், தீயவர்களையும் அழிப்பதிலே அதிதீவரமானவளாக விளங்குகின்றாள். அதேபோல தன்னை வழிபடுகின்ற அடியார்களுக்கு அருள்மழை பொழிவதிலும் பெருங் காருண்யம் மிக்கவளென இக்கிராம மக்கள் காளியைப் போற்றுகின்றனர். காளியை எல்லை காக்கும் கடவுளாகக் கருதுவதால் எல்லையம்மன், எல்லைப்பிடாரி என்ற பெயர்களும் காளியைக் குறிப்பதாகக் காணப்படுகின்றது. வேதங்களும், உபநிடதங்களும் காளியைப் புகழ்ந்து போற்றியுள்ளன. இருக்கு வேதத்திலே காளிசூக்தம் என்னும்பகுதி காளியின் மகிமையை எடுத்தியம்புகின்றது. "சிலம்பு சுழலும் புலம்பும் சீறடி வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை" என சிலப்பதிகாரம் காளியை புகழ்கின்றது. காளிக்கு நவராத்திர விழாவெடுத்து மக்கள் போற்றுகின்றனர். இவ்வாறான புகழ்மிகக் கொண்ட காளிதேவிக்கு, பொலநறுவை கறப்பளையில் ஆலயம் அமைந்து காணப்படுகின்றது.

*" துணையுந் தொழுந் தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்*
*பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்*
*கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்*
*அணையும் திரிபுரசுந்தரி யாவது அறிந்தனமே. "*

- வளரும்...






# இவ்வார ராசிபலன்

**23-06-2023 வெள்ளி தொடக்கம் 29-06-2023 வியாழன் வரையும்**







**மேஷம்:** பணிவான பேச்சு பணம் வரவு தரும் வாரம். விவேகம் கூடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். திடீர் செலவு ஏற்படும். நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மதிநுட்பத்தோடு செயல்படுவீர்கள். நட்டமில்லாமல் நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். உளுந்து தானம் செய்வதால் சிறந்த பலனை அடையலாம். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழிலமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும் வகையில் அமையும். ஊக்கம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாளைய கனவு நனவாகும். குதூகலம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 4,9,2,7
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,X




**ரிஷபம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். தனம் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் தீரும். நன்மைகள் பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் நிறைந்திருக்கும். திருப்தியான காலம். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். உடல் சோர்வு ஏற்பட்டு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Y




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும் வாரம். முன்னேற்றமான காலமாக அமையும். மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மையுண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவுகள் ஏற்படும். வருத்தங்கள் மறையும். எதிர்ப்புக்கள் விலகும். வசந்தம் தேடி வரும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செய்தி அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலைபளு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றித் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. சிறப்புக்கள் சேரும். வெறுப்புகள் அகலும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். தொட்டது துலங்கும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். கமி'ன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். போட்டிகள் கடுமையாகும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். உறவினர் பகை மாறும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 8,4,9,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். விரோதங்கள் விலகும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய் வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். ஆண்களின் அதிகாரம் உயரும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தன லாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். தடைகள் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். குதூகலமான மனநிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**கன்னி:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். விரக்திகள் மறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச்சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கடுமையான காலம். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உள்ளம் மகிழும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான தருணம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். மனக்குழப்பம் தீரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். வேலை பளு குறையும். சந்தோஷம் அலைமோதும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் கச்சைகள் தீரும். மனம் அமைதி தேடி அலைவீர்கள். காதலில் வெற்றிக் காண்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. போட்டி பொறாமைகள் விலகும். திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சீராகும். முகப்பொலிவு கூடும். திட்டமிட்ட செயல் வெற்றிப் பெறும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். அரசு வழி ஆதாயம் பெருகும். பணியில் உயர்வு உண்டு. வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். மன அமைதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,Z




**துலாம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். பணியில் உயர்வு உண்டு. அறிவாற்றல் பளிச்சிடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிடைக்கும். பொறாமைகள் விலகும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். விலை உயர்ந்தப் பொருட்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பொருளாதாரம் உயரும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். புண்ணியம் சேரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். பித்தளை தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் விலகும். திருமணப் பேச்சு வரும். உணவு பிரியம் அதிகரிக்கும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். வெளிநாட்டு நபருடன் பேச்சு நடக்கும். நிர்வாகத் திறமை கூடும். எதிர்பார்ப்புக்கள் கூடும். பொறுப்புக்கள் கூடும். முன்கோபத்தைத் தவிர்க்கவும். இடமாற்றம் நன்மை தரும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பணத்தட்டுப்பாடு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். அற்புதமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பணவரவும், மனநிறைவும் தரும் வாரம். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். சேமிப்பு வளரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் முன்னேற்றம் அடைவீர்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வரம் தரும் காலம். நட்பு வட்டம் விரிவடையும். ஆசைகள் நிறைவேறும். பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன்சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். தாய் வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். முன் கோபத்தைக் குறைக்க வேண்டும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 2,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Q

*(தொடர்ச்சி _30_ பக்கம்)*

# அன்பின் தொனி - 695

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**

**ஜெபிக்க வேண்டியது ஒரு கட்டளை -** Praying is a Command

**ஜெபத்தை எப்படி ஏறெடுப்பது -** How to be offered

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீப மாயிருக்கிறார்.
**- சங்கீதம் 145: 18**

துன்மார்க்கருக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார், நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார். **- நீதிமொழிகள் 15: 29**

தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு, தேவன் வானத்திலிருக்கிறார் நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.
**- பிரசங்கி 5: 2**

அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம், மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள், அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும் போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்ளூ உங்கள் பிதாவை நோக்கிநீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். **- மத்தேயு 6: 5-8**

மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.
**- மத்தேயு 21: 22**

ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். **- மாற்கு 11: 24**

பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். **- யோவான் 9: 31**

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.
**- யோவான் 15: 7**

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த்தரித் திருங்கள்.
**- ரோமர் 12: 12**

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். **- எபேசியர் 6: 18**

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். **- கொலோசெயர் 4: 2**

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். **- யாக்கோபு 1: 5-6**

**கிறிஸ்துவின் மூலம் ஜெபம் -** Pray through Christ

ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப் பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதி காரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ள வர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். **- எபேசியர் 10: 19-22**

தொடரும்...



## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** சிறப்புக்கள் சேரும் வாரம். பொறாமைகள் விலகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிட்டும்.. பொருளாதாரம் உயரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். ஆனந்தம் பெருகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக்கடன் வசூலாகும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச்செலவு அதிகரிக்கும். காரிய வெற்றி கிட்டும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். பூமிவாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டாகும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C

**மகரம்:** சாதனை படைக்கும் வாரம். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டாகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். காரியங்கள் கைகூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. லாபம் தரும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்துமாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனிதாபிமானம் உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கி விடும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர்கள். திருமண முயற்சி நல்லதாக அமையும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,2,1

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q

**கும்பம்:** விரக்திகள் மறையும் வாரம். நீண்ட நாளைய கனவு ஒன்று நனவாகும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். நாவடக்கம் தேவை. விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி பெருகும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றம் ஏற்படும். வம்பு தும்புகள் ஒழியும். ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் நிதானம் தேவை. வியாபாரத்தால் நன்மை உண்டு. மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். எதிர்ப்புகள் தவிடுபொடியாகும். குழப்பங்கள் நீங்கும். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். மனநிம்மதி பெருகும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. இன்னல்கள் அகலும்

வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,5,2

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,T

**மீனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். தொழில் போட்டி மறையும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. தேவைகள் அதிகரிக்கும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவனம் தேவை. போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பானச் செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6

அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,H







# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND

**A mortgage is a journey, and with each payment, we are closer to the destination of full homeownership.**




**Contact Me Today**

**NESAN** Subramaniam **416-908-5656**

| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
canada

www.nesan.ca

மொன்றியல் நகரில் உதயன் விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1420 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 23, 2023

# வெற்றிகரமான 17வது ஆண்டில் ஏழு வெற்றியாளர்களை கௌரவித்து உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா








கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தால் 2006ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பெற்று. தனது வெற்றிகரமான 17வது ஆண்டில் ஏழு வெற்றியாளர்களை கௌரவித்து வரலாற்றில் இடம் பிடித்த சிறப்பான விழா என்ற பெயரை தட்டிக் கொண்டது உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா.

கடந்த 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள மெற்றோபொலிட்டன் கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்றது.

முன்பக்கத்தில் காணப்படும் விருதுகள் பெற்ற மூன்று வெற்றியாளர்களோடு மேலும் மூவர் தங்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர் இங்கே காணப்படும் படங்களில் உதயன் கலை இலக்கிய மேன்மை விருது வழங்கப்பெற்ற சின்னையா சிவனேசன் அவர்கள், 'தலைமைத்துவ விருது' பெற்ற சட்டத்தரணி லக்சுமி வாசன் அவர்கள் மற்றும் வர்த்தக வெற்றியாளர் விருது பெற்ற 'பாபு புளோரிஸ்ட்' நிறுவன உரிமையாளர் மார்க்கண்டு விஜயகுமார் ஆகியோர் மேடையில் தங்களுக்குரிய விருதுகளைப் பெற்றுக்கொள்வதையும் அவர்களோ வர்த்தகப் பெருமக்கள் மற்றும் ஒன்றாரியோ மாகாண அரசி-ன் உறுப்பினர் லோகன் கணபதி, அரிஸ் பாபிகியன் ஆகியோர் மகிழ்ச்சியுடன் நிற்பதையும் காணலாம்.

(உள்ளே விபரமான செய்தி 16ம் பக்கத்தில்)

# கனடா — ஸ்காபுறோ நகரில் எழுந்தருளியிருக்கும் துர்க்கேஸ்வரம் ஆலயத்தின் மஹாகும்பாபிசேகப் பெருவிழா



கனடா-ஸ்காபுறோ நகரில் எழுந்தருளியிருக்கும் துர்க்கையம்மன் ஆலயத்தில் கடந்த 18-06-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மஹாகும்பாபிஷேகம் மற்றும் விமான (ஸதூபி) கும்பாபிஷேகம் ராஜகோபுர கும்பாபிஷேகம் தொடர்ந்து நடைபெற்ற மஹா கணபதி ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்குமான அபிசேகங்கள் ஆகியவற்றுடன் நிறைவு பெறுகின்றது.

இங்கே காணப்படும் படங்களில் அன்றைய உபயகாரரான வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார் உட்பட நண்பர்கள் பக்தர்கள் அனைவரும் பக்திப் பரவசத்துடன் கலந்து கொண்டுள்ளதைக் காணலாம்.

# தமிழ்நாடு பிள்ளையார்பட்டி டாக்டர் கி. பிச்சைக்குருக்கள் அவர்களுக்கு 'கனடா துர்கேஸ்வரம்' நிர்வாகம் வழங்கிய "சைவப் பேரரசர்" விருது



கடந்த வாரம் நடைபெற்ற கனடா துர்க்கேஸ்வரம் ஆலய கும்பாபிசேகப் பெருவிழாவை தலைமை சிவாச்சாரியப் பெருமகனாக இருந்து சிறப்பாக நடத்திய தமிழ்நாடு பிள்ளையார்பட்டி டாக்டர் கி. பிச்சைக்குருக்கள் அவர்களுக்கு துர்கேஸ்வரம் ஆலய நிர்வாகத்தால் "சைவப் பேரரசர்" என்னும் கௌரவ விருது வழங்கப்பெற்றது.

நூற்றுக் கணக்கான அடியார்கள் கலந்து சிறப்பித்த இந்த வைபவத்தில் கனடா துர்க்கேஸ்வரம் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கணேச சுவாமிகள் தியாகராஜக் குருக்கள் அவரது பாரியார் மற்றும் குடும்பத்தினர் மற்றும் உபயகாரர்கள் ஆகியோர் சூழ்ந்து நிற்க இந்த உயர் கௌரவம் வழங்கப்பெற்றது.

Sai Autism Learning Centre
647 444 4033
If they can't learn the way WE teach, we teach the way THEY learn.
Sathya Suresh
Social Service Worker
Summer Workshop Starts July 5th
I am here to help my Tamil community with special needs.

# ஒட்டாவாவில் நடைபெற்ற லிபரல் உறுப்பினர்களுக்கான விழாவில் ஸ்காபுறோ லத்திகா நகை மாளிகை சசிகுமார் — பிரியா தம்பதிக்கு வாழ்த்துத் தெரிவித்த கனடியப் பிரதமர்



கனடாவின் ஆளும் லிபரல்கட்சியின் அதி-உயர் அங்கத்துவம் கொண்டவர்களின் டுயரசநைச ஊடரடி ஆதரவாளர்களை வருடா வருடம் கனடியப் பிரதமர் சந்தித்து விருந்துண்டு தனது நன்றியைத் தெரிவிப்பது வழக்கம்.

இந்தவகையில் 2023 ம் ஆண்டிற்கான சந்திப்பும் விருந்துபசாரமும் கடந்த 12ம் திகதி ஒட்டாவா மாநகரில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட ஸ்காபுறோ லத்திகா நகை மாளிகையின் அதிபர் சசிகுமார்-பிரியா தம்பதிக்கு நன்றியும் வாழ்த்துக்களையும் தெரிவித்த பின்னர் கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களோடு இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டதை இங்கு காணலாம்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker